மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

லர் 2 | 1 - 3 - 54 | இதழ் 21



★

விண் ஆளும் ஆண்டவனின்
பிரதிநிதியான
மதத் தலைவரை

மண் ஆளும் மன்னனின்
பிரதிநிதிகளான போர்வீரர்கள்
கைதுசெய்கின்றனர்

★

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளி நாடு அணா

அண்ணாவும் பத்திரிகைத் தொடர்பும்

கல்லூரியில் படிக்கும்போதே அறிஞர் அண்ணா அவர்களுக்குப், பத்திரிகைகளில் கதைகள் எழுதவேண்டும் என்பதில் ஊக்கமும், ஆவலும் மிகுதியும் உண்டு. அவர் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கையில், "ஆனந்த விகடன்," "ஆனந்தபோதினி" ஆகிய பத்திரிகைகளில் சில கதைகள் எழுதி வெளிப்படுத்தியிருக்கிறார்.

1935-ல் அறிஞர் அண்ணா காலஞ்சென்ற தோழர் பாசுதேவ் அவர்களோடு சேர்ந்து, அவருக்குத் துணையாக நின்று, தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். அப்பொழுது "பாலபாரதி" என்ற வாரப்பத்திரிகைக்கு அண்ணா அவர்கள் ஆசிரியராக இருந்து, தொழிலாளர் நலம் பேணிக் கட்டுரைகள் எழுதிவந்தார். அந்தப் பத்திரிகை சில திங்கள்கள் நடைபெற்றுப் பிறகு நின்றுவிட்டது.

பிறகு 1936-ல் அப்பொழுது செங்குந்தமித்திரன் அச்சகத்தின் நிர்வாகியாக இருந்த காஞ்சி மணிமொழியார் அவர்களோடுக், கூட்டாகச் சேர்ந்து "நவயுகம்" என்ற சிறந்த அறிவு விளக்க வாரப்பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து நடத்திவந்தார். பொருளாதார நெருக்கடியின் காரணமாகச் சில திங்கள்களுக்குப் பிறகு அது வெளிவரவில்லை.

பின்னர் இந்தி எதிர்ப்புக் காலத்தில் 1938-ம் ஆண்டு வாக்கில் "விடுதலை" நிலையத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அதில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குமேல் அரும்பணியாற்றினார். அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்து வன்மையைத் தமிழகத்திலுள்ள அனைவரும் அறிந்துகொள்ள அப்பொழுதுதான் சிறந்த வாய்ப்பு ஏற்பட்டது.

"விடுதலை"யை விட்டு நீங்கிய பிறகு 1942-ம் ஆண்டில், காஞ்சீபுரத்திலிருந்து, சொந்தப் பொறுப்பில் "திராவிடநாடு" வார இதழைக் கொண்டுவந்தார். "திராவிடநாடு" மாணவர்களையும், தமிழறிந்தவர்களையும், தமிழார்வங் கொண்டோரையும் பெரும்வகையில் இயக்கத்தில் கொண்டுவந்து சேர்த்ததோடு, நீதிக்கட்சியின் சீமான்கள், புராணப் பண்டிதர்கள், கதாகாலட்சேபக்காரர்கள், பணக்காரர்கள், அரசியல் சூதாடிகள் ஆகியோரை விரட்டிவிரட்டியடிக்கவும் ஆரம்பித்தது. அது ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியுற்றுச், சிறப்புற்றோங்கி நடந்தேறிவருவதாயிற்று.

1949-ல் திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கியபோது, அதற்குப் பக்கத்துணையாக இருக்கவேண்டித் தோழர் டி. எம். பி. அவர்கள் முயற்சியில், அறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு "மாலைமணி" நாள் கருத்திதழ் வெளிவந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் ஊட்டம் பெறுவதற்கு அது பேருதவியாக நின்று நிலவியது. பொருளாதாரக் கட்டுப்பாட்டால் ஓராண்டு காலத்திற்குள் அது நிற்கும்படி ஏற்பட்டுவிட்டது.

கழகத்தின் முழுப் பொறுப்பிலே நாளிதழ் ஒன்று கொண்டுவரவேண்டும் என்ற விடா முயற்சியின் விளைவாக 1953 ஜூன் 15-ம் நாளிலிருந்து "நம்நாடு" அறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிறது. "நம்நாடு" சிறந்த முழுத்திறம்படைத்த நாளிதழாக வெளிவரவேண்டும் என்ற உறுதிப்பாட்டோடு, அதற்கான நடவடிக்கைகளில் முயற்சி செலுத்தி வருகிறார். "Home Land" என்ற ஆங்கில வார இதழைத் துவக்குதற்கான முயற்சியில் இப்பொழுது ஈடுபட்டுள்ளார்.

அறிஞர் அண்ணாவின் எழுத்து, பத்திரிகை யுலகிலே இற்றை நாளில் நல்லதொரு புரட்சியை உண்டாக்கிவிட்டது; மாணவர் உலகை அடியோடு மாற்றிவிட்டது என்றால் மிகையாகாது.

மன்றம்
இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

1 - 3 - 54 திங்கட்கிழமை

வடவெல்லை உரிமைக் கிளர்ச்சி

தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய நான்கும் மொழிவழி மாநிலங்களாகப் பிரிந்து, இனவழித் திராவிடக் கூட்டாட்சி நாடாக மலரவேண்டும் எனபதுதான், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தாகும் என்பதை, அடிக்கடி நாட்டவர்க்கு உணர்த்தி வந்துள்ளோம்.

விசால ஆந்திரம் ஏற்படுவதும், சம்யுக்த கருநாடகம் தோற்றம் கொள்வதும், ஐக்கிய கேரளம் உருவாவதும், ஒன்றுபட்ட தமிழகம் மலருவதும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் குறிக்கோளுக்கு உடன்பாடானவையே யொழிய மாறுபட்டவையல்ல. இன்னுங் கூறப்போனால், அந்த நிகழ்ச்சிகள் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவனவாகும். இன்பத் திராவிடத்தைக் காணும் முயற்சியை இவையெல்லாம் எளிதாக்குகின்றன என்று பொருள்; குறிக்கோளின் நிறைவேற்றத்தை அருகிலே கொண்டுவருகின்றன என்று பொருள்.

உண்மை இவ்வாறு இருக்க, மொழிவழி மாநிலம் பிரிவதைத் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது என்று உளறிக் கொட்டுபவர்கள் இருக்கின்றார்கள் என்றால், அவர்கள் அறிஞர் அண்ணாவின் கூற்றுக்களை, கழகத்தின் குறிக்கோளை, மாநில மாநாட்டின் தீர்மானத்தை அறியாதவர்கள்; அறிய மறுப்பவர்கள்; அவசரக்காரர்கள்; ஆத்திரப்படுபவர்கள்; அழுக்காறு அடைபவர்கள் என்று எண்ணி, அவர்களை ஒதுக்கித் தள்ளுக!

கழகம் திராவிடக் கூட்டாட்சியைக்காண விரும்புகிறதென்றால், அதற்காக மொழிவழி உரிமைகள் பறிபோகப் பார்த்துக்கொண்டிருக்காது என்ற கருத்தை ஏழாண்டு காலத்திற்கு முன்பே அறிஞர் அண்ணா அவர்கள் "திராவிடநாடு" இதழில் தீட்டிக் காட்டியுள்ளார்கள்.

சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ் வழங்கும் பகுதிகளை ஆந்திர மாநிலத்தோடு சேர்த்திருக்கும் கொடுமையைத் திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாக கண்டித்தது; தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு, சேர்க்க வேண்டி, திருத்தணியிலும், சித்தூரிலும் உரிமைக் குரல் எழுப்பப்பட்டபோதும், உரிமைக் கிளர்ச்சி துவக்கியபோதும், அவற்றிற்கு ஆதரவு அளித்துத், தனது தொண்டர் படையினையும் அனுப்பி வைத்தது; தமிழக வடவெல்லை உரிமையை நிலைநாட்டுவதற்கான முயற்சிகள் எல்லாவற்றிலும் கலந்துகொண்டு, அவற்றை வெற்றியுறச் செய்வதற்கான முறைகளில் பாடுபடவேண்டும் என்று சித்தூர் மாவட்டத்திலுள்ள தி. மு. க. தொண்டர்களையும் கேட்டுக் கொண்டது. கழகத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் கழகத் தொண்டர்கள், திருத்தணித் தமிழர் கிளர்ச்சியில் ஈடுபட்டுத் தடியடி பட்டும், சிறைபட்டும் உரிமைப்போரை நடத்தினர்.

இந்திய அரசியலார், எல்லை ஆய்வுக்குழு (எல்லைக் கமிஷன்) ஒன்றினை நியமித்து, எல்லைத் தகராறுபற்றி அது தீர்ப்பு வழங்கும் என்று கூறியிருப்பதால், சித்தூர்ப் பகுதி மக்கள் அந்தத் தீர்ப்பினை எதிர்பார்த்திருக்கிறார்கள்; நாமும் எதிர்பார்த்திருக்கிறோம். தீர்ப்பு நல்ல முறையில், தமிழர்க்கு நீதி கிடைக்கும் வகையில் அமைந்தால், அது மகிழ்ச்சியோடு வரவேற்கப்படும்; இல்லையெனில் உரிமைக் கிளர்ச்சிகளின் மூலம் அது நிலை நாட்டப்பட வேண்டி வரும்.

சித்தூர்த் தமிழ்ப்பகுதிகளிலுள்ள மக்களிடத்தில், அப்பகுதிகள் தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டியதன் இன்றியமையாமையை எடுத்துரைத்து, அவர்களுக்கு உணர்ச்சியும் ஊக்கமும், அறிவும், தெளிவும் ஊட்டி, உரிமைக் கிளர்ச்சிக்கான வகையில் அவர்களைப் பண்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பைச், சித்தூர் மாவட்டத்திலுள்ள திராவிட முன்னேற்றக்கழகத்தார் இந்த இடைக்காலத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழ்ப் பகுதிகளைத் தமிழ

கத்தோடு இணைக்கும் பொறுப்பைச், சித்தூர் மாவட்டத்திலுள்ள திராவிட முன்னேற்றக் கழகங்கள், தங்களின் அரிய, முக்கிய பணியாகக் கொள்ளவேண்டும்; தலைமை கழகம் விரும்பும் உதவியை அவ்வப்போது செய்துவரும்.

எனவே, "உறுதிகொள்வோம்; உரிமையை நிலைநாட்டுவோம்; ஆந்திரம் அமைவதையும் ஆதரிப்போம்; ஒன்றுபட்ட தமிழகத்தையும் உருவாக்குவோம்" என்ற முறையில் பொதுவாகக் கழகத் தோழர்கள், குறிப்பாகச் சித்தூர் பகுதியிலுள்ள கழகத் தோழர்கள் முயலுவார்களாக! ஆந்திரத் தோழர்களோடு மாற்சரியங் கொள்ளாமல், மனமகிழ்ச்சியோடு பழகி உரிமையை நிலைநாட்ட முயலுவார்களாக!

டி. கே. சி.

தமிழன்பர் தோழர் டி. கே. சிதம்பரநாதனார் இயற்கை எய்திய செய்தி துக்கத்தையும், துயரத்தையும் தருவதாகும். தமிழ் வாழவேண்டும், வளரவேண்டும் என்பதிலே நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு தமிழ் நாட்டிலே வலம் வந்த சீரியராவார் அவர். தமிழ் இலக்கணத்தில், தமிழ் இலக்கியங்களில் அவர் செய்த திருத்தங்களும், அவை பற்றி அவர் கொண்ட கருத்துக்களும் அப்படியே நம்மால் ஏற்றுக்கொள்ளும் தன்மையனவாக அமையவில்லை என்ற போதிலும், அவரது தமிழார்வம் போற்றிப்புகழப்பட வேண்டியதாகும். அவர் நாடெங்கும் நெருங்கிய நல்ல பல நண்பர்களைக் கொண்டிருக்கும் அளவுக்கு இனிய பண்பாடுகளைக் கொண்டிருந்தார். அவரது பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கும், அவரது நண்பர்களுக்கும் ஆழ்ந்த பரிவு உரித்தாகுக.

என். ஆர். சாமியப்பா

வீழ்ச்சியுற்ற பார்ப்பனரல்லாத சமுதாயத்திற்கு எழுச்சி பயக்க நின்று நிலவிய நீதிக் கட்சிக்கு, ஒரு பெருந்துணையாக நின்ற தலைவர்களுள் தலைசிறந்து விளங்கியவரும், நாட்டாண்மைக் கழகத் தலைவராக இருந்து தஞ்சை மாவட்டத்திற்கு நலம்பல புரிந்தவரும், சட்டமன்ற உறுப்பினராக இருந்து அருந்தொண்டாற்றியவரும், கூட்டுறவு இயக்கம் செழித்தோங்கிவளர ஊக்கங்கொண்டு உழைத்தவரும் ஆன தோழர் என். ஆர். சாமியப்பா அவர்கள் மறைந்துவிட்டார் என்ற செய்தி நம்மையெல்லாம் திடுக்கிட வைத்தது; துயரத்தில் ஆழ்த்தியது. அவருடைய மறைவு பொதுவாகத் திராவிட மக்களுக்குக், குறிப்பாகத் தஞ்சை மாவட்ட மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். வயது 57 தான்; இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கலாம்; அவருடைய தொண்டால் நாடு இன்னும் ஏற்றமும் எழுச்சியும் பெற்றிருக்கலாம்; ஆனால் அந்த வாய்ப்பினைப் பெறமுடியாத அளவுக்கு இயற்கையின் கொடுமை அவரை நம்மினின்றும் பிரித்துவிட்டது. அவர் தஞ்சைத் தரணியிலே வாழ்ந்த பெருநிலக்கிழார் என்றாலும், உழவர் பெருமக்களிடத்தே நல்லுறவை நிலைநாட்டுவதில், மற்றப் பெருநிலக்கிழார்களைக்காட்டிலும் நாட்டம்மிகச் செலுத்தினார்; நலம் பயந்தார். ஏழை மாணவர்கள் கல்விபயின்று ஏற்றம் பெற அவர் புரிந்த தொண்டு போற்றுவதற்குரியதாகும். அரசியல் உலகில், 'சுயநல அறுவடை செய்ய' அடிக்கடிக் கட்சிவிட்டுக் கட்சி மாறிக்கொண்டிருக்கும் சில அரசியல் சூதாடிகளைப் போலல்லாமல், ஒரு நிலைத்த கொள்கையிலேயே இறுதிவரையில் இருந்து அவர் உயிர் நீத்தார். அவருடைய பெயரும் புகழும், பிறர்க்கு எடுத்துக் காட்டாக விளங்கும் வகையில் என்றென்றும் வாழ்வனவாக! அவரைப் பிரிந்து துக்கமுறும் அவருடைய குடும்பத்தினர்க்கும், உற்றார் உறவினர்க்கும், நண்பர்களுக்கும் எம் ஆழ்ந்த பரிவு உரித்தாகுக!

சிறைக்குள்ளே எங்களைத் தள்ளி விடுவதன் மூலம், எங்கள் லட்சியத்தை மக்கள் மன்றத்திலிருந்து மறைத்துவிட முடியாது. உலைக்கூடத்திலே கொல்லன், இரும்புத் துண்டைப் பழுக்கக் காய்ச்சி, சம்மட்டியால் அடித்தடித்து, கூர்முனை ஈட்டிகளை எவ்வாறு உருவாக்குகிறானோ, அதைப் போன்றதேதான், ஆட்சியாளரும் எங்களைச் சிறைக்கனுப்பி, கூரிய ஈட்டிகளாக்குகின்றனர். ஒவ்வொரு முறையும் சிறை சென்று மீண்டுவரும்போது, நாங்கள், ஈட்டி முனையைக்காட்டிலும் அதிகக் கூர்முனை உள்ளவர்களாக மாறிவருகிறோம்.

—அறிஞர் அண்ணா

கருத்துக் கதிர்

நேருவும் தேர்தலும்

பண்டித நேரு இந்தியாவின் பிரதமராக மட்டுமல்லாமல், இந்திய தேசியக் காங்கிரஸின் தலைவராகவும் இருந்துவருகிறார். இரண்டு பொறுப்புகளும் ஒன்றுக்கொன்று உதவி செய்துகொள்ளக்கூடிய மாதிரியில், அப் பொறுப்புகளின் தன்மைகள் ஆக்கப்பட்டிருக்கின்றன.

காங்கிரஸ் மாளிகையில், காங்கிரஸ்காரர்களை வைத்துக்கொண்டு, என்ன என்ன திட்டங்களை அவர் முடிவு செய்கிறாரோ, அத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பிரதமர் பதவியைத் தாராளமாகப் பயன்படுத்திக்கொள்கிறார். அரசாங்கம் எடுக்கும் எந்தவித அட்டூழிய—அநியாய—அடக்குமுறைச் செயல்களுக்கும் ஆதரவு தர காங்கிரஸின் தலைமையைப் பயன்படுத்திக்கொள்கிறார். திட்டங்கள் தீட்டவேண்டியது காங்கிரஸ் கட்சி; அவற்றை நிறைவேற்ற வேண்டியது அரசாங்கம்! சலுகைகள் காட்ட வேண்டியது அரசாங்கம்; அவற்றைக் கொண்டு வளரவேண்டியது காங்கிரஸ்! இந்த முறையில் தான் 'ஜனநாயகம்' ஈடேற்றப்படுகிறது இந்த நாட்டில்!

பிரதமருக்கான சலுகைகள் அத்தனையையும் பெற்றுக்கொண்டு பண்டித நேரு, திருவாங்கூர்-கொச்சியிலும், பெப்சுவிலும் காங்கிரஸுக்கு ஆதரவாகத் தேர்தல் பிரச்சாரம் செய்து வந்திருக்கிறார். அரசாங்கத்தின் விமானம், அரசாங்கத்தின் பணம், அதிகாரிகளின் கூட்டுறவு, போலீஸ் பாதுகாப்பு, தனிப் புகைவண்டி, குளிர்ச்சியறை பொருந்திய புகைவண்டி பெட்டி, மேடை அமைத்தல்—ஒலி பெருக்கி அமைத்தல்—அரசாங்கக் கட்டிடங்களையும் மைதானங்களையும் கொடுத்தல் போன்ற அரசாங்க ஏற்பாடுகள் ஆகிய இவ்வளவும் காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்திற்குப் பண்டித நேருவால் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. நேரு திருவாங்கூர்-கொச்சித் தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்து சென்ற வகையில் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட செலவு ரூ. 75,000. இவ்வளவு சலுகைகளும் எதிர்க்கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கப்படுமா? புகைவண்டிப் பெட்டியில் நின்றுகொண்டே தேர்தல் பிரச்சாரம் செய்யவும், புகைவண்டி நிலையங்களிலும், அவற்றின் அருகிலும் மக்கள் கூட்டம் கூடவுமான வசதிகள் பெப்சு மாநிலத்தில் பண்டித நேருவுக்குச் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன. இதே சலுகைகள் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் செய்துகொடுக்கப்படுமா? செய்து கொடுக்கப்பட்டதா? இல்லை! என்று சொல்லித் தெரியவேண்டிய நிலையில் யாரும் இல்லை! ஜனநாயக உரிமைகள் இந்த நாட்டில் எந்த அளவுக்குக் கொலை செய்யப்படுகின்றன என்பதற்கும், அரசாங்கத்தின் ஆக்கங்கள் ஒரு கட்சிக்கே எப்படி ஏகபோக உரிமைகளாக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கும் பண்டித நேருவின் தேர்தல் பிரச்சார முறையே போதிய சான்றாகும்.

நேருப் பண்டிதர் காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்லுவதில் தவறில்லை; அந்த முறையால் அரசாங்கத்திற்கு இம்மி அளவு தனிச் செலவும் ஏற்படாது; ஏற்படக்கூடாது. ஆனால் நேரு காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் செல்லுகிறாரா அல்லது பிரதமர் என்ற முறையில் செல்லுகிறாரா என்று பார்த்தால், பிரதமர் என்ற முறையில்தான் செல்லுகிறார் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். நேரு காங்கிரஸ் தலைவராகத்தான் செல்லுகிறார் என்றால், கவர்னர், கலெக்டர், ஐ. ஜி., டி. எஸ். பி., போன்ற அதிகாரிகள் விமானக் கூடத்திற்கோ, புகைவண்டி நிலையத்திற்கோ செல்வானேன்; பேட்டி கொடுப்பானேன்? இத்தகையோரின் பேட்டி எதிர்க்கட்சித் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு வரும்பொழுது உண்டா? எதிர்க்கட்சிக்காரர்களுக்கு மட்டும் இல்லாமல் போவானேன்? நேரு அரசாங்க மாளிகைகளில் தங்குவானேன்? அளவுக்கு மீறிய போலீஸ் பாதுகாப்பைப் பெறுவானேன்? இவையெல்லாம் ஜனநாயகத்தை ஒழுங்காகக் கட்டிக்காக்கும் தன்மைகளா?

ஜனநாயகத்தின் குரல்வளையை எந்த அளவுக்கு நெரித்துப்போட்டு, யதேச்சாதிகார ஆட்சியைக் காங்கிரஸ் நடத்திவருகிறது என்ப

நற்கு நேருவின் தேர்தல் பிரசார முறையே போதிய அளவு சான்று பகரும்.

ஃ ஃ ஃ

கல்விமுறையும் ஆட்சித்துறையும்

கல்விமுறையில், ஆட்சித்துறையாளர்கள் தம் விருப்பு வெறுப்புக்கு ஏற்றாற்போல் தலையிட்டுக், கட்டளைகளை வற்புறுத்தக்கூடாது; அப்படி வற்புறுத்தினால், கல்வித்துறையே பாழ்பட்டுப்போகும்; கல்வி முறையில் மாற்றமோ, திருத்தமோ செய்யக்கூடியவர்கள் கல்வித்துறையாளராகவே இருக்கவேண்டும் என்னும் கருத்துப்பட, சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரறிஞர் ஏ. இலக்குமணசாமி அவர்கள், திருச்சிக் கூட்டம் ஒன்றில் பேசியுள்ளார்.

நாகரிக மேம்பாடும், அறிவு வளர்ச்சியும் கொண்ட நாடுகளிலெல்லாம் கல்விமுறைபற்றித் திட்டம் தீட்டும்பணி கல்வித்துறையாளரைச்சேர்ந்ததாகவும், அத்திட்டத்திற்கு ஆக்கம் கொடுக்கவேண்டியதும், அதனை நிறைவேற்றிவைக்கவேண்டியதும் ஆன பணி ஆட்சித்துறையாளரைச் சேர்ந்ததாகவுமே கருதப்படுகின்றன. ஆனால் இந்த நாட்டில், காங்கிரஸ் ஆளவந்தார்கள், அந்தக் கொள்கைக்கு நேர் முரணாகக், கல்வித்துறையில், அவ்வப்போது தலையிடுவதையே தொழிலாகக் கொண்டிருப்பதால், சென்ற சில ஆண்டுகளாகக் கல்வித்துறை மிகவும் பாழ்பட்டுவிட்டது என்பது கண்கூடு. இன்று அப்பாழாக்கும் சக்தியின் முழு உருவமாகக் காட்சியளித்துவருபவர் அன்பர் ஆச்சாரியார்! அறிஞர் ஏ. இலக்குமணசாமி அவர்களின் சொற்பொருளை இந்த நாடு என்று உணருமோ, அன்றுதான் இந்த நாடு உருப்படும் என்பது மட்டும் உறுதி!

ஃ ஃ ஃ

தாழ்த்தப்பட்டோரின் நலிவு தீர

நமது நாட்டுச் சமுதாயத்திலுள்ள வருணாச்சிரம வளைவுகளும், சனாதனச் சருக்கல்களும் நீக்கப்பட்டால்தான், ஏற்படுத்தப்படுகிற அரசியல்—பொருளாதாரச் சீர்திருத்தங்கள் நிலைத்து நிற்கமுடியும், இல்லையேல் அச்சீர்திருத்தங்கள் கோரும் பலனைக் கொடுக்கமுடியாமற் போகும் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தார் அடிக்கடி தெளிவுபடுத்தி வருகிறார்கள்; அக்காரணம்பற்றித்தான், அரசியல்—பொருளாதாரப் புரட்சியோடு சேர்த்தே சமூகப்புரட்சியும் ஏற்படக் கழகத்தார் பாடுபட்டுவருகிறார்கள்.

வருணாச்சிரமம் என்னும் சமூக அநீதியால் வஞ்சிக்கப்பட்டுக், தாழ்த்தப்பட்டு, ஒதுக்கப்பட்டுக் கிடக்கும் தாழ்த்தப்பட்டோரின் நிலை உயரவேண்டுமானால், வருணாச்சிரமம் அடியோடு அழிக்கப்படவேண்டும்; அழிக்கப்பட்டால்தான் ஏற்படும் அரசியல்—பொருளாதார உரிமைகளும் பலன்பயப்பனவாக அமையும் என்பதைப் பலகாலும் நாம் வற்புறுத்திவருகிறோம். நாம் கூறிடும் இந்தக் கருத்தைப், பழுத்த காங்கிரஸ்காரரும், இந்திய அரசாங்க அமைச்சருப், தாழ்த்தப்பட்டோரின் தலைவர்களில் ஒருவருமான தோழர் ஜகஜீவன்ராம், அண்மையில் தில்லியில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில். அழுத்தந்திருத்தமாக வற்புறுத்திக் கூறியுள்ளார். தாழ்த்தப்பட்டோரின் இனம் வாழவேண்டுமானால், வருணாச்சிரம முறை அடியோடு ஒழிக்கப்படவேண்டும் என்றும், வருணாச்சிரம முறை இருக்கும் வரையில் தாழ்த்தப்பட்டோர் உயர வழியில்லை என்றும், வருணாச்சிரம முறை நீக்கப்படாமல், தாழ்த்தப்பட்டோர் பெறுகிற கல்வி ஏற்றமும், பொருளாதார ஏற்றமும் எந்தவகைப் பலனையும் அளிக்காது என்றும் அவர் கூறியுள்ளார். தாழ்த்தப்பட்டோரின் இனத்தைச் சேர்ந்த ஜகஜீவன்ராம் அவர்களுடைய இந்தக் கூற்றுச் "சமுதாய சீர்திருத்தம் அவ்வளவு அவசியமில்லை, பொருளாதாரச் சீர்திருத்தம் ஏற்பட்டால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்று கூறிடும் அரசியல் வாதிகளுக்கு நல்ல தெளிவு பயக்கும் என்று கருதுகிறோம்!

ஃ ஃ ஃ

கம்பர் விழா

கம்பர் விழா மாநாட்டை இவ்வாண்டு சென்னையில் கூட்டியுள்ளார்கள், கம்பநாட்டாழ்வாரின் 'பக்தகோடிகள்!'.

கம்பர் விழாவில், கம்பரின் இசை (புகழ்) மாரியைவிடப் பகுத்தறிவாளரின்மீது வீசப்படும் வசைமாரியே மிகுந்திருப்பது வழக்கமாகிவிட்டது.

பகுத்தறிவாளர்கள், கம்பராமாயணத்தின் மீது கற்பிக்கப்பட்ட, காட்டப்பட்ட 'பக்திச் சிறப்பு' எந்த அளவுக்குச் சமுதாயத்தைப் பாழ்படுத்தியது என்பதை விளக்கிக்காட்டி, அந்த அளவுக்கு அந்தப் 'பக்திச்சிறப்பு' வெறுக்

கப்படவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி வந்தனர்; வற்புறுத்தி வருகின்றனர். கம்ப ராமாயணத்திலுள்ள அணியழகு, உவமையழகு, சொல்நயம், பொருள் நயம் ஆகிய 'காவிய நயங்களை' மக்கள் மாந்தி மகிழ்வதைப் பகுத்தறிவாளர்கள் வெறுக்கவுமில்லை; மறுக்கவுமில்லை.

இன்று கம்பர் விழாவைக் கொண்டாடுவோரில் பெரும்பாலோர், கதைக்காகக் கொண்டாடுகிறார்களா, காவிய நயத்துக்காகக் கொண்டாடுகிறார்களா என்று பார்த்தால், காவிய நயத்தைவிட, கதையின் பெருமையை நிலை நாட்டவே பாடுபடுகிறார்கள் என்பது தெரிய வரும். காவிய நயத்தை நுகரத்தான் கம்பர் விழா என்றால், கம்பராமாயணச் சுவடிக்கு மாலை என்? மரியாதை ஏன்? சூடம் சாம்பிராணி ஆராதனை ஏன்? தூப தீப நைவேத்தியம் ஏன்? கைகூப்பி வணங்குவதேன்? யானைமேல் பவனி ஏன்! இவையெல்லாம் பக்திக்காகச் செய்யப்படும் செயல்களா அல்லது காவிய நயத்திற்காகச் செய்யப்படும் செயல்களா? பக்திக்காகத்தான் என்று சொல்லவும் வேண்டுமோ!

கம்பராமாயணச் சொற்பொழிவாளர்களில் பெரும்பாலோர், இராமன் எப்படி மகாவிஷ்ணுவின் அவதாரம், சீதை எப்படி இலட்சுமியின் அவதாரம், இராமாயணம் எப்படித் தெய்வத் தன்மை பொருந்தியது, அதனைப் படிப்பதால், படிக்கப் பக்கத்திருந்து கேட்பதால் எப்படி இதற்குமுன்பு செய்த பாவம் இனிமேல் செய்யப்போகிற பாவம் எல்லாமும் போகும், குரங்கின் வால் எப்படி நீண்டது, குரங்கு எப்படிக் கடலைத் தாண்டியது, இராமன் விட்ட அம்பு எப்படிப் பல இடங்களைச்சென்று மீண்டும் அவனிடம் வந்து சேர்ந்தது, மாரீசன் எப்படிப் பொன்மான் வேடம் எடுத்தான் என்பன போன்ற 'அற்புதங்களை' உண்மை என நிலைநாட்டப்படுகின்றனரேயொழிய, காவிய அழகைக்கண்டு மக்கள் களிக்கவேண்டும் என்பதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டல்ல பாடுபடுவது. காவிய நயத்தைவிடக் கதையின் பெருமையைத்தான் அவர்கள் முக்கியமாகக் கருதுகின்றனர். எனவேதான், அத்தகையோரின் எண்ணத்தையும், செயலையும் வன்மையாகக் கண்டிக்கவேண்டிய நிலைக்குப் பகுத்தறிவு இயக்கம் செல்லுகிறது. அரபியரின் ஆயிரத்தொரு இரவுகள், பஞ்சதந்திரக் கதைகள் ஆகியவற்றைப் படிப்பதுபோல் கம்ப ராமாயணத்தையும் படிக்க முயலுவோரைப் பகுத்தறிவு இயக்கம் குறைசொல்லாது; குற்றங் காணாது.

எந்த வைதீக மனப்பான்மையின் அடிப்படையில், கம்பர் விழா கொண்டாடப்படுகிறதோ, அதே வைதீகம், நாளுக்குநாள் செத்துக்கொண்டு வருகிறது என்பதை மட்டும் கம்பர் விழா நடத்துவோர் உணர்ந்துகொள்வார்களாக! கம்பராமாயணத்தின் கதை பற்றிய 'பக்தி' குறையட்டும்; காவிய நயம்பற்றிய 'பற்று' வளரட்டும்!

ஃ ஃ ஃ

அறிவு வாதமா? ஆணவ வாதமா?

டால்மியா புரத்தைக் கல்லக்குடி என்று பெயர் மாற்றுவதற்கான காரணங்களைத், திராவிட முன்னேற்றக் கழகம், சென்ற இரண்டாண்டு காலமாகப், பொதுமக்கள் முன்னிலையில், தெள்ளத் தெளிய எடுத்துவைத்து வருகிறது.

டால்மியாபுரம், லைசென்சு பெற்றுள்ள விதத்தில் வடநாட்டு ஆட்சி ஆதிக்கத்தின் அறிகுறியாகவும், பொருள் திரட்டும் வகையில் வடநாட்டுச் சுரண்டலின் அறிகுறியாகவும், வடநாட்டின் பெயரைப் பொறுத்தவரையில் வடநாட்டு மொழி ஆதிக்கத்தின் அறிகுறியாகவும், இவை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்போது திராவிடத்தின் அவமானச் சின்னமாகவும் காணப்படுவதால், அதனை, அந்த இடத்தின் பழந்தமிழ்ப் பெயரான கல்லக்குடி என்று மாற்றுவதன் மூலம், அவமானச் சின்னத்தைத் துடைப்பதாகவும், வடநாட்டு ஆதிக்கங்களை எதிர்ப்பதன் அறிகுறியாகவும் கொள்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம். டால்மியாபுரத்தைக் கல்லக்குடி என்று பெயர் மாற்றம் செய்கிறோம் என்றால், நமது குறிக்கோளை, இந்நாட்டவர்க்கும், வடநாட்டவர்க்கும், ஆட்சியிலுள்ளோர்க்கும், அவனியிலுள்ளோர்க்கும் அறிவிக்கின்றோம் என்று பொருள்; மாற்றப்படவேண்டிய பல பெயர்களுக்கு முன் எடுத்துக்காட்டு என்று பொருள்.

இந்தக் காரணங்களை அடிப்படையாக வைத்துத்தான், டால்மியாபுரத்தைக் கல்லக்குடி

என்று மாற்றும்படியாக ஆட்சியாளரைக் கேட்டுக்கொண்டோம்; ஆட்சியாளர் மாற்ற இணங்கவில்லை. எனவேதான், நாமே மாற்றுவது என்று முடிவுசெய்து மாற்றிக் காண்பித்தோம்.

அண்மையில் கல்லக்குடியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட முதலமைச்சர் ஆச்சாரியார், "டால்மியாபுரத்தைக் கல்லக்குடி என்று மாற்றச் சொல்லுபவர்கள் நாளை தென்னைமரத்தைப் பனைமரமாக மாற்றித்தா என்று கேட்டாலும் கேட்பார்கள்" என்று பேசியுள்ளார். இந்தக் கூற்றில் எவ்வளவு ஆணவம் கலந்திருக்கிறது என்பதை யாரும் எளிதில் அறியக்கூடும். டால்மியாபுரத்தைக் கல்லக்குடி என்று மாற்றுவது தென்னை மரத்தைப் பனைமரமாக மாற்றச் சொல்லுவது போன்றதா? டால்மியாபுரத்தைக் கல்லக்குடி என்றுதான் மாற்றியிருக்கிறோமே! அது மாற்றக்கூடியதாயிற்றே! ஆச்சாரியாரின் மனம் மாறவில்லைஎன்பதைத்தவிர, பெயர் மாற்றத்தில் கடினம் ஏதும் இல்லையே! தென்னை மரத்தைப் பனைமரமாக யார் மாற்றச் சொல்லுவார்கள், ஆச்சாரியார் போன்ற பிடிவாதக்காரர்களைத் தவிர? மாற்றக்கூடிய தன்மை கொண்டனவா அவை? இப்படி ஏன் பொருத்தமற்ற உவமைகளைக்கூறி, தம் அறியாமையை வெளிப்படுத்திக் கொள்கிறார் ஆச்சாரியார் என்று தெரியவில்லை! அவர் அறிவு வாதம் செய்வதாகத் தெரியவில்லை! ஆணவ வாதமே எங்கும், எப்பொழுதும், எதற்கும் பேசுகிறார்!

"தென்னை மரத்தைப் பனைமரமாக மாற்றித்தா என்று கேட்பார்களே!" என்று கேலிக் குரலில் ஆச்சாரியார் பேசுகிறார். ஆனால் நாம் அப்படியொன்றும் தென்னைமரத்தின் பெயரை மாற்றிப் பனைமரத்தின் பெயராக்க முயலவில்லை. உண்மையில் ஆச்சாரியாரும், அவரைச்சார்ந்த ஆளவந்தாரும்தான், தென்னைமரத்தைப் பார்த்துத் தவறாகப்பனைமரமென்று கூப்பிடுகிறார்கள் நாம் அதைக்கண்டு, உண்மையான பெயரைக் கொண்டு கூப்பிடுங்கள் என்று கூறுகிறோம். அந்த ஊருக்கு அமைந்த இயல்பான பெயர் கல்லக்குடி; ஆனால் அரசாங்கத்தின் தவறால் அதன் பெயர் மாற்றப்பட்டு டால்மியாபுரம் என்று அழைக்கப்படுகிறது. அதை மாற்றிக் கல்லக்குடி என்ற உரிமையான பெயரால் அழைக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டோம். நாம் கல்லக்குடியை கல்லக்குடியென்று அழைக்கவேண்டும் என்று கூறும்பொழுது ஆச்சாரியார்தான் கல்லக்குடியை டால்மியாபுரம் என்று நிலைநாட்டுவதில் முனைந்திருக்கிறார். நாமல்ல, அவர்தான் தென்னை மரத்தைப் பார்த்து "இது பனைமரமாயிற்றே! இதையெப்படித் தென்னைமரமென்று கூப்பிடுவது!" என்று பேசுகிறார். கண்ணில் ஏற்பட்ட கோளாறோ, கருத்தில் ஏற்பட்ட மயக்கமோ, நாமறியோம்.

பனைமரத்தினடியில் நின்று பனங்கள்ளை உண்டவனுக்குப் பார்க்கும் மரமெல்லாம், அது தென்னையாயினும், வாழையாயினும், கமுகாயினும், எதுவாயிருந்தாலும் எல்லாம் பனைமரமாகத்தான் தோன்றும். அது பனங்கள் செய்கிற வேலை! அதுபோல வடநாட்டுப் போதையில் ஆழ்ந்திருக்கும் ஆச்சாரியாருக்குக், கல்லக்குடி, வடநாட்டு ஊராக—டால்மியாபுரமாகக் காட்சியளிக்கிறது! தவறு என்று கூறுவோர் மீது, போதை வெறியில் எகிறிக்குதிக்கிறார், துள்ளிவிழுகிறார், கத்தியை நீட்டுகிறார், துப்பாக்கியை வெடிக்கிறார், கடைசியில் வெறியடங்காமல் சிரித்துப் பேசுகிறார் சிந்தனை பிறழ்ந்த நிலையில். ஐயனே! போதை தெளிந்தபின் பாருங்கள், கல்லக்குடி கல்லக்குடியாகக் காட்சியளிக்கும்! கருத்திலே ஏற்பட்டுள்ள மருட்சியும் நீங்கும்!

ஃ ஃ ஃ

ஆங்கில மொழிப் பயிற்சி

ஆங்கில மொழியை, இந்தியத் துணைக் கண்டத்தை விட்டு அறவே அகற்றிவிட்டு, அது நிலவி வரும் இடங்களிலெல்லாம் இந்தியை நிலைநாட்டுவதற்கான முயற்சி, இந்தி மொழி வெறியர்களால், மிக விரைவாகச் செய்யப்பட்டு வருகிறது.

இந்திய தேசிய காங்கிரஸை ஆட்டிப் படைக்கும் தன்மையும், இந்திய அரசாங்கத்தில் ஆதிக்கம் செலுத்தும் தன்மையும், வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர்களின் வசம் இருப்பதால், அவர்கள், தங்கள் தாய்மொழியான இந்தியை ஆங்கிலத்திற்கு ஈடாகச் செய்யவும், இந்திக்குச் சீரும் சிறப்பும் தேடித் தரவும் அரும்பாடு படு

கிறார்கள். ஆங்கிலம் அன்னிய மொழி ஆகவே அது கூடாது என்று கூறும் இந்தி வெறியர்களும், அவர்களுக்கு அடிமைப்பட்டோரும், அன்றாடத் தேவைகளையும், அறிவுப் பெருக்கத்தையும் நிறைவேற்றித்தரும் பண்பு இந்திக்கு இருக்கிறதா என்பதை எண்ணிப்பார்க்க மறந்து விடுகின்றனர்.

ஒருவர் தம் தாய் மொழியினிடத்துப் பற்று செலுத்துவதும், அது ஆட்சி மொழியாகப், பள்ளிப் பாடம் பயிற்றும் மொழியாக ஆக வேண்டும் என்று ஆவல்படுவதும் தவறல்ல. இந்தியாவிலுள்ள எந்த மொழியினரும், தம் தாய்மொழி ஒன்றைமட்டும் வைத்துக்கொண்டு, இன்றைய உலகியல் வாழ்வை நடத்த முடியுமா என்றால், முடியாது. உலகிலுள்ள பல்வேறு நாடுகளோடும் உறவாட, வேறு நாடுகளோடு அரசியல்-வாணிகத் தொடர்புகொள்ள, விஞ்ஞான அறிவைப்பெற, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எந்த ஒரு மொழியாவது பயன்படுமா என்றால் பயன்படாது. இத்தேவைகளை நிறைவேற்றித்தரும் பண்பு தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராட்டியம், வங்கம், பஞ்சாபி போன்ற மொழிகளுக்கு எப்படி இல்லையோ, அப்படியேதான் இந்திமொழிக்கும் இல்லை. எனவே இந்தியாவிலுள்ள எந்த மொழிக்காரரும், இந்தத் தேவைகளை நிறைவேற்றித் தரும் உலக மொழி ஒன்றினைத் தேடியே தீரவேண்டும். அப்படிப்பட்ட பண்பமைந்த உலக மொழி எது என்று இன்றைய நிலையில் பார்த்தால், அது ஆங்கில மொழியாகத்தான் இருக்கிறது. அத்தகைய ஆங்கிலத்தின் தொடர்பு, இந்தியாவிற்கு, இருநூறு ஆண்டுக் காலத்திற்கு முன்பிருந்தே கிடைத்திருப்பது, அந்த வகையில், ஒரு நல்ல வாய்ப்பேயாகும். இந்த நிலையில் ஆங்கிலம் அறவே கூடாது, அதற்குப் பதில் இந்தி மொழி ஏற்றப்படவேண்டும் என்று இந்தி மொழி வெறியர்கள் கூச்சலிடுகின்றனர் என்றால், உலக நாடுகளின் உறவை, வாணிகத் தொடர்பை, விஞ்ஞான வளர்ச்சியை நாம் இழக்கும்படி செய்கிறார்கள் என்றுதான் பொருள்.

திராவிடத்தைப் பொருத்தவரையில் ஆங்கில மொழி எப்படி அயல் மொழியோ அப்படியேதான் இந்தியும் அயல் மொழியாகும். இந்த இரண்டு அயல் மொழிகளில் எந்த அயல் மொழிக்குத் திராவிடர்கள் தங்கள் நேரம், நினைப்பு, உழைப்பு, ஆற்றல், பொருள் ஆகியவற்றைச் செலவழிப்பது, ஏற்றம் தருவது, வளர்ச்சியூட்டுவது, வாழ்வளிப்பது நல்லது என்று பார்த்தால், ஆங்கில மொழிக்குச் செலவிடுவதுதான் நல்லதுஎன்பதை எவரும் எளிதில் உணர்ந்துகொள்ளலாம். தமிழகத்தை எடுத்துக் கொண்டால், தமிழக மக்கள் தங்கள் சுற்றுச் சூழ்நிலைகளை அறிய், உள் நாட்டு வாழ்வை அறிய, உள் நாட்டு வாழ்வை நடத்த, அரசியலை நடத்திச் செல்ல, பள்ளிப் பாடங்களைக் கற்பிக்கத் தாய்மொழியாம் தமிழ் இருக்கிறது; பிற தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டால் போதும். தாய்மொழித் தமிழ், உலகப் பொது மொழி ஆங்கிலம் ஆகிய இரண்டையும் மட்டுமே கற்றுக் கொண்டால் தமிழர்கள் உலகில் உய்ந்து விடலாம்; வேறு மொழி எதுவும் தேவையில்லை. இதுபோன்றே திராவிடத்தைச் சேர்ந்த பிற மொழிக்காரர்களான தெலுங்கரும், கன்னடியரும், மலையாளத்தாரும் தங்கள் தங்கள் தாய் மொழிகளோடு ஆங்கிலத்தை மட்டும் கற்றுக்கொண்டால் போதுமானது. உலக நாடுகளோடு தொடர்புவைத்துக்கொள்வதற்குப் பயன்படுகிற ஆங்கிலம், வடநாட்டோடும் பிற திராவிட மொழிக்காரர்களோடும் தொடர்புவைத்துக் கொள்ளவும் பயன்படுவதாகும். எனவே நாம் தாய்மொழிப் பயிற்சிக்கு அடுத்தபடியாகக் கட்டாயமாகப் பயிற்சி பெறவேண்டுவது, ஆங்கிலமொழிப் பயிற்சியே ஆகும். பிறமொழிகளை அவரவர் விருப்பத்திற்கும், தேவைக்கும், திறமைக்கும் ஏற்றாற்போல் வேண்டுமானால் பயின்று கொள்ளலாம். அவற்றைப் படித்தே தீரவேண்டும் என்ற அவசியமில்லை.

ஆங்கிலமொழிப் பயிற்சியின் அவசியத்தைக், காங்கிரஸ் தலைவர்களில் ஒரு சிலர், இப்பொழுது வற்புறுத்தத் தொடங்கியிருப்பது ஒரு நல்ல அறிகுறியேயாகும். பம்பாய் மாநில அரசாங்கம் ஆங்கிலத்தை அறவே ஒழிக்க முயலும் இப்போது, அங்குக் காங்கிரஸ்காரர்களில் பலரே எதிர்ப்பைக் கிளப்பியது, ஆங்கிலத்தின் அவசியத்தை வடநாட்டாரும் உணர்ந்திருப்பதை அறிவிப்பதாகும். திராவிடத்தைப் போருத்த வரையில் இந்தி மொழி எக்காரணத்தைக் கோண்டும் அவசியமில்லை ஆனால் ஆங்கில மோழிப் பயிற்சி மிக மிக அவசியமாகும்!

தொடர்கதை

கிளியோபாவின் காதலன்

[இரா. செழியன்]

ஒரு வாரத்திற்குள்ளாக, என்னுடைய நினைவுச் சற்றுத் தெளிவடைந்தது. எனது சூழ்நிலையையும் ஓரளவுக்குப் புரிந்துகொள்ள முடிந்தது. முதலில் சில ஏடுகள் காணாமற்போயிருக்கும் கதைப்புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தால், முதலில் ஒன்றும் புரியாது. பின் கொஞ்சங் கொஞ்சமாக முன்பகுதியில் என்ன நடைபெற்றிருக்குமென்று ஊகித்துக்கொள்ள முடியும். அதுபோல எனது நினைவிலிருந்து கடந்த சில நாட்கள் காணாமற்போயிருந்தபோதிலும், மேற்கொண்டு தற்பொழுது நிகழும் நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு சென்ற மூன்று மாதங்களில் நானிருந்த நிலைபற்றி தெரிந்துகொள்ள முடிந்தது.

குறிப்பிட்ட ஒரு சிலரே என்னை—நானென்றால் ஆண்டனியை—அடிக்கடி பார்க்கவருவார்கள். மாலையில் தினந்தோறும் டாக்டர் வருவார். எனது அப்பா காலை, மாலை இரண்டு வேளைகளிலும் வந்துவிட்டுப்போவார். தோட்டத்தில் வேலை செய்யும் மலையாண்டிதான் இரவு பகலாக அறையிலேயே இருந்தான்—ஒரு அடிமை வேஷத்தில். பைத்தியக்கார உலகில்கூட அந்தத் தோட்டக்காரனுக்கு மதிப்பு உயரவில்லை. இவர்களெல்லாம் என் அப்பாவுக்குத் தெரிந்தவர்கள்—அவர்களில் குறிப்பானவர் சங்கரபாண்டியன், வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டுமுறை வந்துவிட்டுப்போவார்கள். சில சமயங்களில் என்னுடன் படித்த முத்துசாமி, தங்கவேலு இவர்களும் காணப்படுவார்கள். யார் வந்தாலும், முதலில் வெளியறையில் பேசுவதும், நடமாடும் சத்தமும் கேட்கும். பின் உடைகள், கவசங்கள் இவைகளை எடுத்துவைக்கும் சத்தம் வரும். பின் மெதுவாகக் கதவு திறந்து, உள்ளே வந்து, "ஹெயில் ஆண்டனி." என்று சொல்லிவிட்டு நிற்பார்கள். வந்திருப்பவர் யாரென்பதைக் கண்டுபிடிப்பதில் நான் முனைந்திருப்பேன். நிற்பவர் தனக்குக் கொடுத்த பாடத்தை ஒப்பிப்பார். இதற்குள்ளாக, என்னைப் பார்க்கவந்த பலருக்கு ரோம் நாட்டு வரலாறு, நடையுடைகள், நகரங்கள், வீரர்கள், அரசியல் தலைவர்கள் இவர்களின் பெயர்கள், ஆண்டனியின் வாழ்க்கை வரலாறு—இவை நன்கு தெரிந்திருக்கவேண்டும். அவர்கள் சொல்லிக்கொண்டு வருகிற பாடங்களில்கூட ஒருவகை ஒற்றுமையிருப்பதை நான் கண்டேன். உள்ளே வருபவர்கள் சொல்வதற்காகச் சிலவகைக் குறிப்பிட்ட பாடங்களையே அவர்கள் வைத்திருந்தனர். இரண்டு மூன்று நாட்களானதும், முன்பு சொல்லப்பட்ட பாடங்கள் திரும்பிவந்தன. அவைகளில் சில முக்கியமானவை "ஆக்டேவியஸ், லெபிடஸ் இருவரும் பாம்பேமீது போர் தொடுத்துவிட்டனர்!" "லெபிடஸ் ஆக்டேவியஸால் வெல்லப்பட்டுவிட்டான்!" "ரோம் நகரச் செனெட்டில் இந்தப் பேச்சுவந்தது!" "எகிப்து நாட்டுக் கப்பல்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றன!" "எகிப்து நாட்டு அரசி இரண்டொரு நாட்களில் வந்துவிடுவார்கள்!" பலர் பல வேஷங்களில் வந்தபோதிலும், எகிப்து நாட்டு அரசியாக யாரும் வரவில்லை. ஆனால் அவர்கள் என்னிடம் பேசும்பொழுது மட்டும் எகிப்து நாட்டு அரசி—கிளியோபாட்ரா என்றெல்லாம் கூறத் தவறுவதில்லை.

அவர்கள் ஒப்பிக்கும் பாடத்துக்கும், வெளியில் பேசிக்கொள்வதற்கும் பெருத்த மாறுதல் இருக்கும். தோட்டத்திலும் வெளியறையிலும், அவர்கள் பேசிக்கொள்வது என் காதில் விழாமற்போவதில்லை.

"இப்பொழுது எப்படியிருக்கிறது?"

"குணமாகிக்கொண்டுதான் வருகிறது!"

"டாக்டர் என்ன சொல்லுகிறார்?"

"அவர் நம்பிக்கையுடன்தான் இருக்கிறார்."

"நான் முதலில் உள்ளேவந்தபொழுது சங்கடப்பட்டுவிட்டேன். ஆண்டனி ஏதாவது கேள்வி கேட்டுவிட்டால், சரியான பதில் சொல்லமுடியாமல் திகைக்கவேண்டி யிருக்கும்."

"ஆனால் முன்புபோல் அவன் சரியாகப் பேசுவதில்லை. வருபவர்களையெல்லாம் சற்றுச் சந்தேகத்துடனேயேப் பார்க்கிறான்."

"தோட்டத்தில் கீழே விழுந்ததிலிருந்து இன்னும் நிலைமை மோசமாகியிருக்குமா?"

"அதுவும் சரியாகக் கண்டுபிடிக்க முடிய வில்லை."

இப்படி இருவர்கள் பேசிக்கொண்டதும், மூன்றாவதாக ஒரு குரல் மெதுவாகக் கேட்கும்.

"அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்க முடிந்ததா?"

"இல்லை, யாரென்றே தெரியவில்லை தோட்டத்தை விட்டு எப்படி மாயமாக மறைந்தாளென்பது ஆச்சரியமா யிருக்கிறது."

"பக்கத்து வீடுகளில் அந்தப் பெண் இருக்கிறாளா?"

"கிடையாது. பக்கத்து தோட்டக்காரர்களைக் கூடக் கேட்டோம். அவர்களாலும் சரியாகச் சொல்ல முடியவில்லை!"

"எப்படித்தான் போயிருக்க முடியும்?"

"இருவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவள் எழுந்து ஓடியதும், இவன் பின்னால் ஓடும்பொழுது காலிடறி கீழே விழுந்தான். அதற்குள் அவள் மாயமாக மறைந்துவிட்டாள்."

"ஒரு சமயம் அந்தப் பெண்ணின் நினைவால்தான் இவன் இப்படி பேசாமல் கவனித்தபடி இருக்கிறானோ?"

"ஆதலால்தான் எகிப்து நாட்டு அரசி—கிளியோபாட்ரா என்று குறிப்பிடும்பொழுது அவன் எப்படிக் கேட்கிறான் என்று பார்க்கிறேன்."

இவ்வாறு தோட்டத்தில் டாக்டர் மற்றவர்களுடன் பேசிக்கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. நினைவு தடுமாறியிருந்த எனக்கு மீண்டும் நினைவு வந்ததற்கான காரணத்தை இப்பொழுதுதான் என்னால் தெரிந்துகொள்ள முடிந்தது. நாடக மேடையில் தலையில்பட்ட அடியால் நான் நினைவிழந்தேன். மீண்டும் தோட்டத்தில் காலிடறி விழுந்தபொழுது, தலையில் பட்ட அடியால் மறுபடியும் நினைவு வந்திருக்கிறது. அதனால்தான், நான் விழித்தெழுந்தபொழுது, தோட்டத்தில் இருந்தேன்.

அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவதிலிருந்து, நான் தோட்டத்தில் ஒரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்திருக்கிறேன். அவள் எழுந்து, அந்த இடத்தைவிட்டு ஓடும்பொழுது, நான் பிடித்துவிட முயற்சித்தபொழுதுதான் காலிடறி கீழே விழுந்திருக்கிறேன். ஆனால் அவ்வாறு என்னுடன் பேசிக்கொண்டிருந்ததாகக் கூறப்படும் பெண் யார்?

நான் தனிமையாக இருக்கும்பொழுது இந்தக் கேள்வி அடிக்கடி என் மனதில் எழுவதுண்டு. சில சமயங்களில் என் மனக்கண்ணில், அந்த முகச்சாயல், கண் பார்வை, கன்னங்களில் குழி விழ மிளிரும் புன்னகை இவை தோன்றிமறையும். சில சமயங்களில், ஒரு நதிக்கரையில் நின்றுகொண்டிருக்கும் என்னை அவள் அழைத்துப்போவதும், படகில் இருவரும் அமர்ந்து உலவிவருவதும், நான் அவளைக் "கிளியோ!" என்று கூப்பிடுவதும், அவள் நாணத்தால் முகத்தைத் திருப்பிக்கொள்வது போன்ற காட்சிகள் தோன்றி மறைந்தன. பனிப்படலத்தில் மறைக்கப்பட்டு, நம்முன்னே நடமாடிச் செல்லும் உருவங்களைப்போல, சில நேரங்களில் அந்தப் பெண் என் அருகே இருப்பதுபோலவும், நன்றாக உற்றுப்பார்க்கும்பொழுது, கண்டுபிடிக்கமுடியாத அளவுக்குத் தொலை தூரத்தில் இருப்பதுபோலவும் தோன்றியது. அவள் யாரென்பது எனக்கு மட்டுமல்ல, என்னுடனிருந்த மற்றவர்களுக்கும் தெரியாமலிருந்ததென்பது, அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வதிலிருந்து உணர முடிந்தது.

ஒருநாள் மாலை, மற்றவர்கள் யாருமில்லாத பொழுது, நான் மாத்திரம் மெதுவாக ஜன்னல் கதவைத் திறந்து தோட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். தோட்டம் எப்பொழுதும் போல பசுமையும் செழுமையும் கொழிக்க காட்சியளித்தது. இளந்தழைகளைப் போர்த்துக்கொண்டு, மரங்கள் காற்றில் சிலிர்த்தபடி

இருந்தன. இந்தச் சிலிர்ப்பு ஓசையும், தோட்டத்து மத்தியிலிருந்த தண்ணீர்த் தொட்டியில் நீர் வழிந்து விழுகிற ஓசையும் தவிர வேறெதுவும் அங்கு கேட்கவில்லை. நான் தோட்டத்தைப் பார்க்கும்பொழுது, மல்லிகைக்கொடி படர்ந்திருக்கும் ஒரு வளைவுப் பந்தலின் கீழிருந்து ஒரு பெண் தோட்டத்துக்குள் போவதைப் பார்த்தேன். அவள் நடந்துசென்று தூரத்தில் விழுந்துகிடந்த மரத்தில் உட்கார்ந்தாள். அவள் தோட்டத்திற்குள் சென்றதை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. அவளும் மற்றவர்களுக்குத் தெரியாமல் அங்கு வந்ததுபோலத்தான் இருந்தது. தன்னை யாரும் கவனிக்கிறார்களாவென்று சுற்றிலும் அவள் பார்த்துக்கொண்டாள். அப்பொழுதுதான் அவள் முகத்தை என்னால் நன்றாகப் பார்க்க முடிந்தது. அவளை அதற்குமுன் எங்கோ பார்த்ததாக—ஆம், நிச்சயமாக அந்தப் பெண்தான். இதற்குமுன் நான் தோட்டத்தில் சந்தித்தப் பெண்தான்—அவள் எப்படி மீண்டும் அங்கு வந்தாள்? மேலும் ஏன் வந்தாள்? தினந்தோறும் மாலையில் அவள் அவ்வாறு அங்கே வந்து போவது வழக்கமா?

நான் தோட்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, மாயாண்டி உள்ளே வந்து எல்லாவற்றையும் தட்டிப் போட்டுக்கொண்டிருந்தான். சற்று நேரத்துக்கெல்லாம், டாக்டரும் மற்றவர்களும் வருவதற்காக அவன் ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். அவன் ஜன்னலருகே வந்தபொழுது, நான் சற்று தூரம் விலகிப் பின் மீண்டும் வந்து பார்த்தபொழுது, என்னால் நம்பமுடியவில்லை. அந்தப் பெண்ணைத் தோட்டத்தில் எங்கும் காணமுடியவில்லை.

நான் ஆச்சரியத்துடன் அங்கு பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, கதவு திறந்து இரு ரோமானியர்கள்—டாக்டரும், எனது அப்பாவும் உள்ளே வந்தனர். வழக்கம்போல் டாக்டர் ஏதோ சொன்னார். அவர்கள் சொல்வதைக் கவனிக்காமல், நான் என் நினைவில் ஆழ்ந்திருந்தேன். அப்பொழுது இன்னொருவர்—என் அப்பாவுக்குத் தெரிந்தவரென்று சொன்னேனே, சங்கரபாண்டியன்—அவர் உள் நுழைந்து, "ஹெயில் ஆண்டனி!" என்று கூவிவிட்டு "எகிப்து நாட்டு அரசி கிளியோபாட்ரா வருகிறாள்!" என்று சொன்னார். அந்தத் திடீர்ச்செய்தி எனக்குத் திகைப்பைத் தந்தது. எனக்கு நினைவு வந்ததிலிருந்து, கிளியோபாட்ரா வேடத்தில் யாரும் வந்ததில்லை.

சிறிது நேரத்துக்கெல்லாம் கதவு திறந்து, அங்கு கிளியோபாட்ரா நின்றாள். ஆரணங்கு! எகிப்து நாட்டு அரசி! ஒரு நீலப் பட்டாடையைப் போர்த்துக்கொண்டு, தலையில் ஒரு சிறு கிரீடமணிந்து அவள் நின்றாள். பார்த்தவுடனேயே தோட்டத்திலே நான் சற்றுமுன் பார்த்த பெண் இவள்தான் என்பது தெரிந்தது. அவளைப் பார்த்ததும், அவள் யார்? எங்கிருந்து வருகிறாள்? தோட்டத்திலிருந்து எப்படி மறைந்துபோனாள்? என்ற கேள்விகள்தாம் என் மனதில் எழுந்தன.

நான் உற்றுப் பார்த்தபொழுது, அவள் பேசாமலிருந்தாள். நான் அருகில் சென்று "நீ யார்?" என்று கேட்டேன், எல்லாவற்றையும் மறந்து. பக்கத்திலிருந்தவர் ஏதோ பதில் சொன்னார். நான் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டபொழுது, "நான்தான் கிளியோபாட்ரா!" என்று அவள் சொன்னாள், வேண்டா வெறுப்பாக. கிளியோபாட்ரா அறையின் மத்தியில் போடப்பட்டிருந்த அரசிருக்கையில் அமர்ந்தாள். அவள் அழகுள்ளவளாகவே காணப்பட்டாள். மிக நடுக்கத்துடன், ஏதாவது சொன்னால் பயத்தால் எழுந்து ஓடிவிடுபவள்போல அவள் காணப்பட்டாள். இளங்காற்றில் அசைந்துகொண்டிருக்கிற மலர், அதேக்காற்றுச் சற்றுப் பலமாக அடித்தால் நடுங்க ஆரம்பித்துவிடுகிறதல்லவா? அதுபோல சற்றுமுன் அசைந்தாடி வந்துகொண்டிருந்த அவள், மாறு உடையுடன் அங்கே வந்ததும் அச்சத்துடன் இருந்தாள். ஒரு வேளை நான் அவளைப் பயமுறுத்திவிட்டேனா?

நான் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த கொத்திலிருந்து ஒரு சிவந்த மலரை எடுத்து, அவளிடம் கொண்டுபோய்க் கொடுத்தேன். அதை நாடகத்தில் நிகழ்வதைப் பார்ப்பதுபோல், மற்றவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர். நான் தந்த மலரைப் பார்த்ததும், அவள் முகத்தில் புன்னகை தவழ ஆரம்பித்தது. இது வெறும் நடிப்புக்காக வந்ததல்ல, உண்மையில் அவள் மகிழ்ச்சியடைந்ததைக் காட்டியது. அந்த மலரை எடுத்து முகர்ந்து பார்த்தாள்.

"மலர் எப்படியிருக்கிறது?" என்று நான்

பேச்சுக்கொடுத்தேன். நான் பேசியது மற்றவர்கள் காதில் விழுந்திருக்காது.

"அழகான மலர்!" என்று அதைப் பார்த்த வண்ணம் அவள்—அந்த எழில் நங்கை கூறினுள்.

"அந்தக் கொத்தில் மற்ற மலர்களிடை இருந்தபொழுது அது அழகான மலராகத் தான் இருந்தது. ஆனுல் இப்பொழுது..." நான் சொல்லி முடிப்பதற்குள் அவள் தலையசைத்துத் தடுத்துவிட்டாள். அவளுடைய அழகிய விரல்களிடை மலர் இருந்தது. மலரின் அருகே, அதனினும் சிவந்த கன்னம், மென்மையான செவ்விதழ்கள், மலர்ந்த கண்கள்—அந்த நிலையில் வாடும் மலரை எப்படி அழகானதென்று கூறமுடியும்?

எங்கேயோ கனவுலகில் என்முன் வந்தவள்—படகிலே அழைத்துச்சென்று, மறைந்துவிடும் நினைவு அலையில் என்னைத் தள்ளிவிட்டுச் சென்றவள், தோட்டத்தில் நடமாடி மறைந்துபோனவள்—இப்பொழுது என்முன் அசையாது, ஓவியக்காரன்முன் உட்கார்ந்திருப்பவள்போல உட்கார்ந்திருந்தாள். நானும் அந்த எழுதாத ஓவியத்தை என் மனத்திரையில் எழுதிக் கொண்டிருந்தேன்.

ஆனுல் அவள் பெயர் என்ன? எங்கிருந்து வருகிறுள்? என்று அறிய ஆவல்கொண்டேன். மலரைப் பார்த்துக்கொண்டிருந்த அவளும் மலர் விழியால் என்னைப் பார்த்தாள்.

"அந்த மலருக்கும் உன் பெயர்தான், இடப்பட்டிருக்க வேண்டும்" என்று நான் சொன்னேன்.

"இந்த மலருக்குக் கிளியோ என்று பெயரா?" என்று அவள் கேட்டாள்.

நான் ஒருகணம் திடுக்கிட்டுத் திரும்பினேன். அவள் இதுவரைப் பேசிக்கொண்டிருந்தது, காட்டிய மகிழ்ச்சி, புன்னகை எல்லாம் எனக்காக அல்ல—ஆண்டணிக்காக, நான் அணிந்திருந்த வேடத்துக்காக. அவள் கிளியோபாட்ரா வேஷத்தில் மற்றவர்களைப் போலவே நடிப்பதற்கு சில பாடத்தை ஒப்பித்துக் கொண்டு வந்திருக்கிறுள். என் மனதில் கோபமும், ஆத்திரமும் மூண்டெழுந்தன. எல்லாம் வெறும் நடிப்பு! நான் சற்று விலகி நின்று "நீ எங்கிருந்து வருகிறுய்?" என்று கேட்டேன். ஏதாவது நாடகம் அல்லது சினிமாவில் நடித்துப் பழக்கம் பெற்றவளாக இருக்க வேண்டும்.

அவள் பயத்துடன் எழுந்து நின்றுள். பக்கத்தில் நின்ற ஒருவர் "எகிப்து நாட்டிலிருந்துதான்" என்று அவளுக்குப் பதிலாகப் பேச வந்தார். என்னுடைய கோபம் இன்னும் அதிகமானது. அவரை வெளியே போகச் சொல்லிவிட்டு, பயந்ததுபோல் நிற்கும் 'கிளியோபாட்ரா' பக்கம்போனேன். எவ்வளவு அடக்கவொடுக்கமாக நின்றுள்! இவ்வளவு நன்ருக நடிப்பவளுக்கு, அதிகப் பணம் கொடுத்துதான் அழைத்துவந்திருக்கவேண்டும். "நீ யார்? ஏன் இங்கு வந்தாய்? உனக்கு எவ்வளவு பணம் கொடுத்தார்கள்?" என்று அவளுடைய கிரீடத்தைப் பிடுங்கி வீசியெறிந்து, அவளைப் பிடித்து வெளியே போகும்படி தள்ளினேன். மற்றவர்களெல்லாம் திகைத்து நின்றனர். இத்துடன் இந்த நாடகம், நடிப்பு, வேஷம் எல்லாம் போதுமென்று தோன்றியது. என் பக்கத்திலிருந்த சாமான்களை உதறியெறிந்துவிட்டு, நான் கதவைத் திறந்துகொண்டு, மாடியில் நான் முன்பு இருந்த அறைக்குள் ஓடிப் போய், மறைந்துகொண்டேன்.

ஏதோ ஆபத்து என்று எண்ணி வெளியே என் வீட்டிலிருந்தவர்களெல்லாம் கூடியிருந்தனர், கதவு தாளிடப்பட்டிருந்ததால் அவர்களால் உள்ளே வரமுடியவில்லை. பின் கதவைத் தட்டிப் பார்த்தார்கள், நான் கதவைத் திறக்காததால், உடைத்துவிட்டு வந்துவிடுவதென முயற்சித்தார்கள். ஒரு பைத்தியக்காரன் ஒரு அறைக்குள் தனியாக புகுந்துகொண்டால், ஏதாவது ஆபத்து நேர்ந்துவிடலாமென்று அவர்கள் கருதியதில் தவறில்லை. என்னுடைய கோபமும் ஒருவாறு தணிந்தது, அவர்களை ஏன் இன்னும் பயமுறுத்தியபடி இருக்க வேண்டுமென நினைத்து, கதவைத் திறந்துவிட்டேன். கதவு திறந்ததும், விழுந்தடித்து, உள்ளே வந்து அவர்கள் நின்றுர்கள். டாக்டரும், அப்பாவும் இன்னும் வேஷத்திலேயே இருந்தார்கள். அம்மா—அவர்களை மூன்று மாதமாக நான் பார்க்கவில்லை. தோட்டத்தில் இரண்டொருமுறை பார்த்தேன். அவர்கள் என் அறைக்குள் வராவிட்டாலும், தினந்தோறும் கதவருகே நின்று என்னைப் பார்த்துவிட்டுச் சென்றதாகப் பின்னர் தெரிந்துகொண்டேன்

—கண்ணீர் விட்டவண்ணம் நின்றார்கள். பின்னால் வேலைக்காரர்களும் அங்கு கூடியிருந்தனர். நான் பேசாமல் எழுந்து, என் பெட்டியைத் திறந்து, ஒரு வேட்டியை எடுத்துச் சுற்றிக் கொண்டு, ஒரு சட்டையைப் போட்டு, பழைய நிலையடைந்தேன்.

நான் முற்றிலும் குணமடைந்த செய்தியைக் கேட்டதும், எங்களுக்குத் தெரிந்தவர்கள் பலரும் அடிக்கடி வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். முதலில் பைத்தியக்காரன் என்றதும் எவ்வளவு பேர்கள் வந்தனரோ, அவர்கள் எல்லோரும் மறுபடியும் பைத்தியம் நீங்கியவனையும் பார்க்க வந்தனர். ஏதோவொரு வேடிக்கையான செய்தி! ஆனால் கடைசிநாளன்று, 'கிளியோபாட்ரா' என்று சொல்லிக்கொண்டு ஒரு பெண் வந்தாளே அவள் மட்டும்—அவள் பெயர் வசந்தா என்று கேள்விப்பட்டேன். நான் நினைத்ததுபோல ஏதோ நடிக்க வந்தவளல்லவாம். சங்கரபாண்டியனுக்குத் தெரிந்த பெண் என்று சொன்னார்கள்—அவளை மட்டும் நான் பார்க்கவில்லை. கடைசியாக ஒரு நாள் எங்கள் வீட்டில் ஒரு விருந்து வைக்கப்பட்டிருந்தது. அதற்கு அந்தப் பெண்ணும் அழைக்கப்பட்டிருந்தாள். ஆனால் அதற்கும் அவள் வரவில்லை. தெரியாமல், அவளைப் பிடித்து வெளியே விரட்டி அனுப்பியது அவளுக்குக் கோபத்தைக் கொடுத்திருக்கலாம். இருந்தாலும் என்றைக்காவது ஒருநாள் அவளைச் சந்திக்கும்பொழுது நான் என் மன்னிப்பைப் பெறவேண்டுமென்று எண்ணியிருந்தேன்.

ஒரு நாள் மாலை நான் தோட்டத்தின் பின்புறத்தில், ஆற்றோரத்தில் உலவிக்கொண்டிருந்தேன். அங்கு போடப்பட்டிருந்த கல்லின் மீது உட்கார்ந்து, எதிரே வரும் சிறு அலைகளைப் பார்த்தவண்ணமிருந்தேன். இதற்கு முன் இதே வேளையில் அங்கு உட்கார்ந்தது போல் எனக்குத் தோன்றியது. அப்பொழுது ஆற்றில் ஒரு படகு தவழ்ந்து வர, அதில் ஒரு பெண் உட்கார்ந்திருப்பதைக் கண்டது போன்ற ஞாபகம்—எனது நினைவில் மோதி வரும் சிறு அலைகள்—எனக்கு வந்தது. எனக்கு முன் பரந்துகிடந்த ஆற்றுவெளியைப் பார்த்தேன். மேற்கிலிருந்து வழிந்துகொண்டிருக்கும் மஞ்சள் வெய்யிலில் அது ததும்பிக்கொண்டிருந்தது. நான் பழைய—மறைந்துபோன காட்சியை நினைவுபடுத்த முயலும்பொழுது, மீண்டும் அதேகாட்சி என் எதிரே தோன்றியது. தூரத்தில் ஒரு படகு அசைந்து வந்துகொண்டிருந்தது. அதில் ஒரு பெண்ணும் உட்கார்ந்திருந்தாள். அது நேராகப் போய்விடும்போலிருந்தது. ஏனோ ஒருவிதக் தைரியத்துடன் கையை யசைத்து அதை அழைத்தேன். அந்தப் படகும் தனது திசையை மாற்றி, நானிருந்த கரையோரம் வந்தது. படகில் அதே பெண்தான்—அந்தப் பெண் வசந்தாதான் அமர்ந்திருந்தாள்.

படகில் அவள் பேசாமல் உட்கார்ந்திருந்தாள், நானும் கரையிலிருந்தபடி அவளைப் பார்த்தபடி இருந்தேன். படகில் ஏறி அமர அவள் அனுமதிப்பாளா, அல்லது அவள் இறங்கி கரைக்கு வருவாளா-அவளோ அடங்கியொடுங்கி, தன்னிடத்தைவிட்டு அசையாமல் இருந்தாள். கடைசியாக நான் இறங்கி, படகில் ஏறி அமர்ந்து, துடுப்புகளை எடுத்துத் தள்ளிவிட்டேன். படகு நகர்ந்தது.

அவளிடம் ஏதேதோ சொல்லவேண்டுமென்று பலப்பல நினைத்திருந்தேன். ஆனால் அப்பொழுது எல்லாம் மறந்துவிட்டன. கடைசியாக, அவளைப் பார்த்து, "வசந்தா!" என்று கூப்பிட மட்டுமே என்னால் முடிந்தது.

இதுவரைக் குனிந்திருந்த வசந்தா ஏறிட்டுப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் ததும்பி வழிந்தது.

ஒன்றும் புரியாதவாறு மயங்கிக்கிடந்த அந்தியிருள் மறைந்தது. அடிவானத்தில் பனிப்படலம் படர்ந்தது. பின் குளிர்ந்த திங்கள் பொலிவுற எழுந்தது. நானோ, என்னருகே யிருந்த முழுமதியைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தேன்.

தென்றல் சிலிர்த்தது. பால்வெளியில் படகு கவலையின்றி தவழ்ந்து சென்றுகொண்டிருந்தது.

(முற்றிற்று)

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் சட்டணம்	6—0—0	7— 8—0
ஆறுமாதம் ,, ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,, ,,	0—4—0	0— 5—0

கண்டெடுத்த கவிதை

[வேண்டப்படாத பழைமைக்குப் பணிந்து, நெளிந்து, வளைந்து, வணங்கிச் சென்று கொண்டிருந்த கவிதை உலகைப், புதுமைப் பக்கம் திருப்பி, அச்சமற்ற புதுமுறுக்கோடு செல்லும்படிச் செய்ய, துணிந்து முன்வந்த முதல் கவிஞர், புத்துலகக்கவிஞர் சுப்பிரமணிய பாரதியாராவார். அவர் துவக்கிக் கொடுத்த அந்த வழியை, அறிவும் அழகும், எழிலும் ஏற்றமும், வலிவும் வளமும் பொருந்தச், செப்பனிட்டுத் தரும் பெரும்பணியைத், திறம்படச் செய்துவருபவர், பாரதியாரின் தலை மாணாக்கரான புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் ஆவார். பாரதியாரின் பாடல்களில், அவரது ஆரம்பக்காலத்துப் பாடல்களைவிட, அவரது இறுதிக்காலத்துப் பாடல்கள் சீர்திருத்தம் நிறைந்தனவாகவும், பகுத்தறிவொளி வீசுவனவாகவும், முற்போக்குக் கருத்துச் செறிந்தனவாகவும், இருக்கக் காணலாம். பாரதியாரின் பாடல்களில் பல, மக்கள் கண் முன் வராமல் மறைந்தும் போயின; சில மக்கள் மன்றத்துக்குக் கொண்டுவரப்படாமல் மறைக்கப்பட்டும் போயின.

பாரதியாரின் கவிதைகளில், சீர்திருத்தமும் பகுத்தறிவும் செறிந்த கவிதை—இதுவரையில் பொதுமக்கள் மன்றத்திலிருந்து மறைக்கப் பட்டுப்போன கவிதை—ஒன்று இப்பொழுது மக்கள் மன்றத்துக்குக் கண்டெடுத்துக் கொண்டுவரப்பட்டுள்ளது. பாரதியாரால் பாடப்பட்ட அக்கவிதை ஏறத்தாழ முப்பது ஆண்டுக்காலத்திற்கு முன்னால், புதுச்சேரியைச் சேர்ந்த வேணு நாயக்கர் என்பவரால் தனி நூலாக அச்சியற்றப்பட்டதென்றும், அது இப்பொழுது பலர்க்கும் கிடைக்கமுடியாதபடி அருகிப்போய்விட்டது என்றும், இப்பொழுது வெளிவந்துள்ள பாரதியார் பாடல் தொகுதி எதிலும் அது இடம்பெறவில்லை என்றும், தோழர் பரலி சு. நெல்லையப்பர் அவர்களின் உதவியால் அது பொதுமக்கள் மன்றத்துக்கு அழைத்துவரப்பட்டுள்ளது என்றும், இவ்வாண்டு வெளிவந்துள்ள "சக்தி" பொங்கல் மலரில் காணப்படும் குறிப்புகளால் நாம் அறியப் பெறுகிறோம். அக்கவிதையை வெளியிட்ட "சக்தி"யின் பணி பாராட்டுதலுக்குரியது. அக் கவிதை இதோ!]—(ஆ-ர்.)

இனிஒரு தொல்லையும் இல்லை—பிரி
வில்லை, குறையும் கவலையும் இல்லை (இனி)

மானிட சாதி ஒன்று

1. மனிதரில் ஆயிரம் ஜாதி—என்ற
வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை;
கனிதரும் மாமரம் ஒன்று—அதில்
காய்களும் பிஞ்சுக் கனிகளும் உண்டு.

2. பூவில் உதிர்வதும் உண்டு—பிஞ்சைப்
பூச்சி அரித்துக் கெடுப்பதும் உண்டு
நாவிற் கினியதைத் தின்பார்—அதில்
நாற்பதி னாயிரம் சாதிகள் சொல்வார்.

3. ஒன்றுண்டு மானிட சாதி—பயின்று
உண்மைகள் கண்டவர் இன்பங்கள் சேர்
[வார்;
இன்று படித்தது நாளை—உயர்ந்
தேற்றம் அடையும் உயர்ந்த திழியும்.

4. நந்தனைப் போல்ஒரு 'பார்ப்பான்'—இந்த
நாட்டினில் இல்லை; குணம் நல்லதாயின்,
எந்தக் குலத்தினரேனும்—உணர்
வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்

மதிவழி இன்பம்

5. ஐந்து புலனை அடக்கி—அரசு
ஆண்டு மதியைப் பழகித் தெளிந்து,
நொந்து சலிக்கும் மனதை—மதி
நோக்கத்திற் செல்ல விடும்வகை கண்
[டோம்.

பொய்ப் புராணங்கள்

6. உண்மையின் பேர்'தெய்வம்' என்போம்—
[அன்றி

ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்
[டோம்
உண்மைகள் ‘வேதங்கள்’ என்போம்—பிறிது
உள்ள மறைகள் கதையெனக் கண்டோம்.

7. கடலினைத் தாவும் குரங்கும்—வெங்
கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்
[ணும்,
வடமலை தாழ்ந்தத னாலே—தெற்கில்
வந்து சமன்செயும் குட்டை முனியும்,

8. நதியி னுள்ளேமுழு கிப்போய்—அந்த
நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதியுற வேமணம் செய்த—திறல்
வீமனும் கற்பனை என்பது கண்டோம்

9. ஒன்றுமற் றொன்றைப் பழிக்கும்—ஒன்றில்
உண்மையென் றோதிமற் றொன்றுபொய்
[யென்னும்
நன்று புராணங்கள் செய்தார்—அதில்
நல்ல கவிதை பலபல தந்தார்.

10. கவிதை மிகநல்ல தேனும்—அக்
கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்
[டோம்;
புவிதனில் வாழ்நெறி காட்டி—நன்மை
போதிக்கும் கட்டுக் கதைகள் அவைதாம்.

சாத்திரமா? சதியா?

11. பின்னும் (ஸ்)மிருதிகள் செய்தார்—அவை
பேணும் மனிதர் உலகினில் இல்லை;
மன்னும் இயல்பின வல்ல—இவை
மாறிப் பயிலும் இயல்பின ஆகும்.

12. ....
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய்—எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை.

13. சூத்திர னுக்கொரு நீதி—தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி;
சாத்திரம் சொல்லிடு மாயின்—அது
சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்.

மேலோர் யார்?

14. வையகம் காப்பவ ரேனும்—சிறு
வாழைப் பழக்கடை வைப்பவ ரேனும்,
பொய்யக லத்தொழில் செய்தே—பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்.

நற்றவம் எது?

15. உற்றவர் நட்டவர் ஊரார்—இவர்க்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
‘நற்றவம்’ ஆவது கண்டோம்—இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்றும் இல்லை.

யோகி யார்?

16. பக்கத் திருப்பவர் துன்பம்—தன்னைப்
பார்க்கப் பொறாதவன் ‘புண்ணியமூர்த்தி’
ஒக்கத் திருந்தி உலகோர்—நலம்
உற்றிடும் வண்ணம் உழைப்பவன் ‘யோகி’

மெய்ஞ்ஞானம் எது?

17. ஊருக் குழைத்திடல் ‘யோகம்’;—நலம்
ஓங்கிடு மாறு வருந்துதல் ‘யாகம்’;
போருக்கு நின்றிடும் போதும்—உளம்
பொங்கல் இல்லாத அமைதி‘மெய்ஞ்
[ஞானம்’

இயற்கை ஆற்றல்

18. எல்லையில் லாத உலகில்—இருந்
தெல்லையில் காலம் இயங்கிடும் தோற்றம்
எல்லையில் லாதன வாகும்—இவை
யாவையு மாயிவற் றுள்ளுயி ராகி,

19. எல்லையில் லாப்பொருள் ஒன்று—தான்
இயல்பறி வாகி இருப்பதுண் டென்றே,
சொல்லுவர் உண்மை தெளிந்தார்—இதைத்
தூவெளி யென்று தொழுவர் பெரியோர்.

20. நீரும் அதனுடைத் தோற்றம்—இந்த
நீல நிறங்கொண்ட வானமும் ஆங்கே,
ஓயுதல் இன்றிச் சுழலும்—ஒளி
ஓங்குபல் கோடிக் கதிர்களும் அஃதே,

21. சத்திகள் யாவும் அதுவே—பல
சலனம் இறத்தல் பிறத்தலும் அஃதே
நித்திய மாமிவ் வுலகில்—கடல்
நீரில் சிறுதுளி போலும்இப் பூமி.

22. இன்பமும் ஓர்கணத் தோற்றம்—இங்கு
இளமையும் செல்வமும் ஓர்கணத்தோற்
[றம்;
துன்பமும் ஓர்கணத் தோற்றம்—இங்கு
தோல்வி முதுமை ஒருகணத் தோற்றம்.

களிப்புற்ற வாழ்வு

23. தோன்றி அழிவது வாழ்க்கை—இதில்
துன்பத்தோ டின்பம் வெறுமையென்
[றோதும்
மூன்றில் எதுவரு மேனும்—களி
மூழ்கி நடத்தல் ‘பரசிவ முத்தி’ (இனி)

மூடநம்பிக்கை என்றால் என்ன?

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

மூடநம்பிக்கை என்றால் என்ன?

சான்று கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ஒன்றை நம்புவது!

ஒரு அதிசயத்திற்கு மற்றொரு அதிசயத்தைக் காரணங் காட்டுவது!

உலகம் அதிர்ஷ்டத்தால் அல்லது அந்தராத்மாவால் ஆளப்படுவதாக நம்புவது!

காரணத்திற்கும் காரியத்திற்கும் உள்ள உண்மைத்தொடர்பை அலட்சியப்படுத்துவது!

எண்ணத்தை, நோக்கத்தைக், குறிக்கோளை இயற்கைக்கு அப்பாற்பட்டதாக வைப்பது!

மனமானது பொருளை உற்பத்திசெய்கிறது, அதனை அடக்கியாண்டுவருகிறது என்று நம்புவது!

பொருளை விட்டுவிட்டு ஆற்றலை மட்டும் நம்புவது; அல்லது ஆற்றலை விட்டுவிட்டுப் பொருளை மட்டும் நம்புவது!

அதிசயச் செயல்கள், மந்திரங்கள், செபங்கள், கனவுகள், ஜோஸ்யங்கள், குறிகள் ஆகியவற்றை நம்புவது!

இயற்கைக்கு மீறிய ஆற்றலை நம்புவது!

மூடநம்பிக்கைக்கு உண்மையான அடிப்படை, அறியாமையாகும்; நம்பிக்கையின்மீது அதன் கட்டிடம் எழுப்பப்படுகிறது; வெறும் ஆவல் அதன் கும்பமாகும். மூடநம்பிக்கை—அறியாமையின் குழந்தையாகும்; துன்பத்தின் தாயாகும்.

கிட்டதட்ட எல்லோருடைய மூளையிலும் மூடநம்பிக்கை என்னும் புகைப்படலம் படர்ந்திருக்கவே செய்கிறது.

தட்டுகளைத் துடைத்துக்கொண்டிருக்கிற ஒருத்தி, துடைக்கும் துணியைத் தவறிக் கீழே விட்டுவிட்டால், அவள் உடனே கூறுகிறாள், "இன்று விருந்தினரின் கூட்டம் வரும்" என்று.

துணி கீழே விழுவதற்கும், விருந்தினர்கள் வருவதற்கும் நேரடியான தொடர்பு எதுவும் இல்லை என்பதைப் பெரும்பாலான மக்கள் ஒத்துக்கொள்ளவே செய்வர். கீழே துணி விழும்தன்மை, எங்கேயோ இருக்கின்றவர்கள் உள்ளத்தில், இங்கே வருகை தரவேண்டும் என்ற விருப்பத்தை எவ்வகையிலும் உண்டாக்கமுடியாது என்பதைப் பலரும் உணர்வர். துணியைக் கீழே போட்ட குறிப்பிட்ட ஒருத்தியைப் பார்க்க, வருகை தரவேண்டும் என்ற விருப்பத்தை, மற்றவர்கள் உள்ளத்தில், எப்படி ஒரு துணி எழுப்பமுடியும்? கீழே துணி விழுவதற்கும், பின்னால் நிகழப்போகிற நிகழ்ச்சிகளுக்கும் நடைபெறக்கூடிய தொடர்பு, உறுதியாக, ஒன்றும் இருக்கமுடியாது.

ஒரு மனிதன், தற்செயலாகத், தன் இடது தோள் மேலாகத் திங்களைப் பார்க்கிறான் என்றால், அவன் உடனே கூறுகிறான், "இது எனக்குத் துர்அடர்ஷ்டம்" என்று.

திங்களை இடதுதோள் மேலாகப் பார்ப்பதோ அல்லது வலது தோள்மேலாகப் பார்ப்பதோ, அல்லது அதனைப் பார்க்காமல் இருப்பதோ திங்களை எந்தவிதத்திலும் பாதிப்பதுமில்லை; உலகிலுள்ள பொருளிடத்துத் திங்களுக்குள்ள ஆக்கத்தையோ அல்லது ஆதிக்கத்தையோ எந்தவிதத்திலும் மாற்றப்போவதுமில்லை. இடதுதோளின் மேலாகப் பார்வையைச் செலுத்துவது. பொருள்களின் இயற்கைப் பண்புகளை, உறுதியாகப் பாதிப்பதில்லை. இடதுதோளின் மேலாகத் திங்களைப் பார்ப்பவ

னின் வாழ்க்கையில், சாதாரணமாக ஏற்படக் கூடிய கெட்ட நிலைமைகளுக்கும், இடது தோளின் மேலாகப் பார்ப்பதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை நாம் நன்கு அறி கிறோம்.

ஒரு பெண், ஒரு பூவிலுள்ள இதழ்களை எண்ணுகிறாள் ; எண்ணும்போது, "ஒன்று, அவன் வருகிறான் ; இரண்டு, அவன் பார்க் கிறான் ; மூன்று, அவன் காதல்புரிகிறான் ; நான்கு, அவன் மணம்செய்கிறான் : ஐந்து, அவன் போய்விடுகிறான்" என்று சொல்லு கிறாள்.

உறுதியாக அந்தப் பூ, அந்தப் பெண்ணி னுடைய காதலைப் பொறுத்தோ அல்லது அவளது திருமணத்தைப் பொறுத்தோ, குறி யாகக் கொண்டு வளரவில்லை ; அதிலுள்ள இதழ்களும் அவைகளைப் பொறுத்து அறுதி யிடப்படவில்லை ; அவள் அந்தக் குறிப்பிட்ட பூவைப் பறிக்கும்போது, எந்த 'அறிவும்' அவள் முன்வந்துநின்று, அவள் கைக்கு வழி காட்டியாக அமைவதில்லை. அதுபோலவே, ஒருவருடைய எதிர்காலம் இன்பகரமாக இருக்குமா, துன்பகரமாக இருக்குமா என் பதை, ஒரு ஆப்பிள் பழத்திலுள்ள விதை களின் எண்ணிக்கை அறுதியிட்டுக் கூறாது.

ஆயிரக்கணக்கான மக்கள் அதிர்ஷ்ட—துர் அதிர்ஷ்ட நாட்கள், எண்கள், குறிகள் அடை யாளங்கள், நகைகள் என்பவற்றில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

பெரும்பாலான மக்கள் வெள்ளிக்கிழமை யைத் துர்அதிர்ஷ்டமான நாள் என்று கருது கிறார்கள். பயணம் புறப்பட, திருமணம் செய்துகொள்ள, ஏதாவது தொழிலில் பங்கு போட அந்த நாள் மிகக்கெட்ட நாள் என்று கருதுகின்றனர். இதற்குச் சொல்லப்படும் ஒரே காரணம் வெள்ளிக்கிழமை துர்அதிர்ஷ்ட மான நாள் என்பதாகும்.

கடற்பயணம் புறப்படுதல், காற்றுகளை அல் லது அலைகளை அல்லது நீர் உயர்தல்களை மற்ற நாட்களில் எந்த அளவுக்குப் பாதிக்கிறதோ, அந்த அளவுக்குக் குறைவாகவோ அதிக மாகவோ வெள்ளிக்கிழமை என்பதற்காகப் பாதிப்பதில்லை அப்படியிருந்தும், வெள்ளிக் கிழமை துர்அதிர்ஷ்டமான நாள் என்று கொள் ளப்படுவதற்கு இருக்கும் ஒரே காரணம், 'அப் படிச்சொல்லப்படுகிறது' என்பதுதான்.

அதுபோலவே, பதின்மூன்று பேர்கள் உட் கார்ந்து சாப்பிடுவது மிக ஆபத்தானது என்று பெரும்பாலான மக்களால் எண்ணப்படுகிறது. அப்படிப் பதின்மூன்று என்பது ஆபத்தான எண் என்றால், இருபத்தாறு என்பது அதைப் போல் இருமடங்கு ஆபத்தானதாக ஆகவேண் டும் ; ஐம்பத்திரண்டு என்பது நான்கு மடங்கு ஆபத்தானதாக இருக்கவேண்டும்!

பதின்மூன்றுபேர்கள் உட்கார்ந்து சாப்பிட் டால், அவர்களில் ஒருவர், ஓராண்டுக் காலத் திற்குள் இறந்துபடுவார் என்று சொல்லப்படு கிறது. ஒவ்வொருவருடைய உணவு செரிக்கும் தன்மைக்கும், உட்காருவோரின் எண்ணிக்கைக் கும் நேரடித் தொடர்பு எதுவும் இருக்கவில்லை; தனிப்பட்டவர்களின் நோய்களுக்கும், எண் ணுக்கும் தொடர்பு இருக்கவில்லை என்பதை நாம் சாதாரணமாக இப்பொழுது அறிகிறோம். பதின்மூன்றுபேர்கள் உட்கார்ந்தால் ஒருவர் உறுதியாக இறந்துபடுவார் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு, எண்ணிக்கையை முக்கிய மாக நாம் எடுத்துக்கொண்டோமென்றால், பதின்மூன்றுபேர்களைவிடப் பதினான்குபேர்கள் என்பது இன்னமும் அதிகமான ஆபத்தைத் தருவதாகத்தானிருக்கவேண்டும்.

உப்பு வைத்திருக்கும் தட்டைக் கவிழ்த்து விடுவது என்பது மிகவும் துர்அதிர்ஷ்டமானது; திராட்சைக்குழம்பைச் சிந்துவது என்பது அவ்வளவு துர்அதிர்ஷ்டமானது அல்ல என்று சொல்லப்படுகின்றது.

ஏன் உப்புமட்டும் எதிரிடையானதாக மாற வேண்டும்; திராட்சைக் குழம்பு சாதகமாக இருக்கவேண்டும் ?

படக்கொட்டகையில் ஒன்றரைக்கண்ணன் முதலில் நுழைந்தால், மக்களின் எண்ணிக்கை குறையும், படம் ஓடுவது தோல்வியுறும் என்று நம்பப்படுகின்றது.

முதலில் நுழையும் ஒரு மனிதனுடைய கண்பார்வைக் கோளாறு, ஒரு சமுதாயத்தின் நோக்கத்தை எப்படி மாற்றிவிடும்? அல்லது சமுதாயத்தின் நோக்கம் எப்படி ஒரு ஒன்ற ரைக் கண்ணனை முதலில் கொட்டகையில் நுழையும்படி செய்யும்? இவைகளுக்குத்

கப்பலோட்டி கண்ட கனவு

[இரா. நெடுஞ்செழியன்]

அகில உலகத்திலுள்ள நாடுகள் பலவற்றை, விலைக்குவாங்கக்கூடிய அளவுக்குப் பணபலமும், தன் ஏவலை ஏற்று நடத்தக்கூடிய அரசுகள் பல, என்று சொல்லத்தக்க வகையில் ஆதிக்க பலமும், உலக நாடுகளிலுள்ள சந்தைகள் பல வற்றைப் பிடிக்கும் அளவுக்கு அறிவு பலமும், அவனியிலுள்ளோர் கண்டு அஞ்சும்படியான அளவுக்கு ஆயுதபலமும் பெற்றுப், பணத்திலும் பலத்திலும் தனக்கு ஈடும் எடுப்பும் உள்ள நாடு எதுவும் இல்லை என்று இறுமாந்திருக்கும் அமெரிக்கா, கண்டுபிடிக்கப்பட்டு 462 ஆண்டு களே ஆகின்றன.

மிகக் குறுகிய காலம்; ஆனால் அதற்குள் அது அடைந்திருக்கும் பொலிவும் பெருமை யும், புகழும் மிகப்பரந்தவை—வளமும் வசதி யும் மிகப் பெரியவை!

நானூறு ஆண்டுகளுக்குமுன்பு காடும் கரம்பு மாகக் காட்சியளித்த அமெரிக்கா, இன்று நாடும் நகரமுமாகக் காட்சியளிக்கிறது!

இருண்டு கிடந்த கண்டம்; இன்று மின் ஒளியால் வெளிச்சமாகி விளங்குகிறது!

நாகரிகம் அறியாத காட்டுமிராண்டிகள் திரிந்த நாடு; நாகரிகத்தை நானிலத்தோர்க் குச் சொல்லிக்கொடுப்பதில் முனைந்துள்ளது!

இயற்கை வளங்களைப் பயன்படுத்தத் தெரி யாமல் அறியாமையில் கிடந்து உழன்ற மக்கள் மட்டுமே வாழ்ந்த இடம்; உலகின் பல்வேறு நாட்டு மாணவர்களையும் வரவழைத்துப் பல் வேறு துறைபற்றிய அறிவைப் பரப்புவதில் பெருமைகொள்ளும் கல்விக்கூடமாக மாறியிருக் கிறது!

பாழ்வெளிகள், கதிர்களை விளைவிக்கும் கழனி களாக மாறியிருக்கின்றன! மேட்டு நிலங்கள், வானைத்தொடும் மாடமாளிகைகள் எழுந்த நகரங்களாக மாறியிருக்கின்றன!

இவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டன! 'ஆண் டவனின் அருளால்' அல்ல! அறிவின் விளை

தெளிவான விளக்கங்கள் ஒருபொழுதும் கொடுக்கப்பட்டதில்லை. இவ்வாறு சொல்லப் படும் காரணத்திற்கும்—காரியத்திற்கும் நாமறிந்தவரையில் எந்தவகைத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை!

வெள்ளைக்கல் அணிந்துகொள்வது துர் அதிர்ஷ்டத்தைத் தரும்; சிவப்புக்கல் அணிந்து கொள்வது, நலத்தை அளிக்கும் என்று நம்பப் படுகின்றது. எதிர்காலத்தை இந்தக் கற்கள் எப்படிப் பாதிக்கும்? அவை எப்படிக் காரணங் களை அழித்துக் காரியங்களைத் தோல்வியுறச் செய்யும்? இவற்றின் விளக்கத்தை யாரும் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை!

இப்படியாகப் பல்லாயிரக்கணக்கான அதிர்ஷ்ட—துர்அதிர்ஷ்டப்பொருள்கள், எச்ச ரிக்கைகள், சகுனங்கள், முன்னறிவிப்புகள் இருக்கின்றன; ஆனால் தெளிவுணர்வும், அறி வுக்கூர்மையும், பகுத்தறிவும் கொண்ட மக்கள் அனைவரும், இவை ஒவ்வொன்றும் அபத்தம் என்றும், முட்டாள்தனமான மூட நம்பிக்கை என்றும் அறிவார்கள்.

வால்; அன்பின் பிணைப்பால்; ஆராய்ச்சியின் பயனால்!

ஒரு இருண்ட கண்டம், ஒளிவீசும் நிலைக்கு உயர்ந்ததற்குக் காரணம், ஆண்டவனின் 'வரத்தை' நம்பியிருந்த தன்மையாலல்ல! மனிதனின் முயற்சியிலே முழுநம்பிக்கை வைத்த போக்கேயாகும்!

அமெரிக்காவைச் சுட்டிக்காட்டி, உலகோர் உய்யும் வழிசெய்ய, ஆண்டவன் அல்ல 'அவதாரம்' எடுத்துவந்தது! 'அவதாரம்' எடுத்து வரவில்லை என்பது மட்டுமல்ல, 'அசரீரி' வாக்காகச் சொல்லக்கூட முன்வரவில்லை! ஆண்டவனுக்கு அத்தகைய அரும்பணி செய்ய நினைப்புமில்லை, நேரமுமில்லை போலும்! அந்த அரிய பணியினைச் செய்ய முன்வந்தவன் ஒரு சாதாரண மனிதன்தான்; பாமரியாக ஊரரால் எண்ணப்பட்டவன்; பஞ்சையாகக் காணப்பட்டவன்; நெசவாளிக்குடும்பத்திலே தோன்றியவன்; உணவு விடுதிவைத்து ஊதியம் பெற்று வயிறுவளர்த்து வந்தவனின் மகன்; அவன்தான் கிரிஸ்தோபர் கோலம்பஸ்!

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தான்; புதிய உலகைக் கண்டுபிடித்த பெருமையையும் புகழையும் பெற்றான்! இப்பொழுது பெறும் அளவுக்குப் பெருமையையும் புகழையும் அவன், தான் கண்டுபிடித்த காலத்திலே பெறவில்லை. அமெரிக்காவைக் கண்டுபிடித்து ஐரோப்பியர்க்கு அறிவித்தான். அதனால் ஐரோப்பியர்கள் பயன்பெற்றார்கள். ஆனால் அவன் பெற்ற பரிசோ இறுதியில் இருப்புச் சங்கிலிதான்!

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த வரலாறே வியப்புக்குரியது. கொலம்பஸ் இந்தியாவைக் கண்டுபிடித்து வந்து சொல்வதாகக் கூறிவிட்டுக் கிளம்பினான்; ஆனால் அமெரிக்காவைக் கண்டுபிடித்துவந்து கூறினான்.

1447-ம் ஆண்டில் சவோனா (இத்தாலி) என்ற இடத்தில் நெசவுத்தொழிலாளியாக இருந்த டொமெனிகோ கொலம்போ என்பவன், ஒரு ஆண் குழந்தைக்குத் தந்தையானான். அப்பொழுது அவன் அறியமாட்டான், அந்தக் குழந்தைதான் பின்னால் அமெரிக்காவைக் கண்டுபிடிக்கும் கொலம்பஸாகத் தோற்றமளிக்கப் போகிறது என்பதை. அவன்தான் எப்படி அறிவான்? நல்லவேளையாக 'ஆண்டவன் தோன்றினான்; அருளினான்', 'அசரீரி தோன்றிற்று; அறிவித்தது', 'காளி தோன்றினாள்; வரங்கொடுத்தாள்' என்பன போன்ற கற்பனைக் கதைகள் அக்குழந்தையின் வரலாற்றோடு பிணைக்கப்படவில்லை.

கொலம்பஸ் ஐந்து குழந்தைகளிலே மூத்தவனாவான். கொலம்பஸின் தந்தை தொழில் காரணமாக ஜினிவாவுக்கும், சவோனாவுக்கும் விட்டுவிட்டு இடம் மாறியபொழுதெல்லாம், கொலம்பஸும் உடன் போகவேண்டி ஏற்பட்டது. அதனால் அவன் பள்ளிப்படிப்பை மிக வாகப் பெறமுடியவில்லை. வாழ்க்கையில் பெற்ற அனுபவங்களே அவனுக்குப் பாடமாக அமைந்தன. மேலும் அவன் மூத்த பிள்ளையானதால் தந்தையின் தொழிலுக்குத் துணைநிற்கவேண்டி வந்தது. சில சமயங்களில் துணிச்சரக்குகளை ஏற்றிக்கொண்டு வியாபாரக் கப்பல்களில் போய் வரவேண்டிய வாய்ப்பு ஏற்பட்டது. அப்படிப் போய்வந்தாலும், மீண்டும் மீண்டும் நெசவுத் தொழிலிலேயே ஈடுபடவேண்டியிருந்தது. நெசவுத்தொழிலைவிட, கப்பல் போக்குவரத்திலே ஈடுபடுவதுதான் அவனுக்குப் பெருவிருப்பத்தைத் தந்தது. ஏறத்தாழ இருபத்தைந்தாவது வயது வரையிலும் தனது தந்தையோடே இணைந்திருந்து தொழில்புரிந்து வந்தான்.

1474-ல் அவன் தந்தையை விட்டுப்பிரிந்து, ஜெனிவாவிலிருந்து மறைந்துவிட்டான். சில ஆண்டுகளுக்குப் பிறகு, லிஸ்பன் துறைமுகத்தில் கப்பல் ஓட்டுபவனாகக் காட்சியளித்தான். இந்த இடைக்காலத்தில், அவன் கப்பல் ஓட்டும் தொழிலைக் கற்றுக்கொள்வதிலே முனைந்திருந்தான் என்று தெரியவருகிறது.

கொலம்பஸ் கப்பல் தொழிலிலே பேரறிவு படைத்திருந்தான் என்றோ, கப்பல் ஓட்டுவதில் மிக்கத் திறமை பெற்றிருந்தான் என்றோ சொல்வதற்கில்லை. அவன் போர்த்துகேசிய வர்த்தகக் கப்பல்களிலே வேலைபுரிந்து, மத்திய தரைக்கடலிலுள்ள துறைமுகங்களுக்கும், அட்லாண்டிக் மாக்கடலில் இங்கிலாந்திலிருந்து, தெற்கே ஆப்பிரிக்காவில் கினியாவரையிலுள்ள துறைமுகங்களுக்கும் சென்றுவரும் பழக்கமுடையவனாக இருந்துவந்திருக்கிறான். இப்படிக் கப்பல் ஓட்டும் நாட்களில் சிறப்பித்துச் சொல்லக்கூடிய நிகழ்ச்சி எதுவும் நடைபெற்றதாகச் சொல்வதற்கில்லை. அவன் கொண்டு

சென்ற கப்பல் ஒன்று, 1476-ம் ஆண்டில் போர்த்துகேசு கடற்கரையில், பாறையொன்றில் மோதி உடைந்து, நொறுங்கிப்போயிற்று என்று வேண்டுமானால் குறிப்பிட்டுச் சொல்லலாம்!

அவன் போர்ச்சுக்கல்லில் தங்கியிருந்த காலத்தில் பேலிப்பா மோனிஜ் என்ற பெண்ணை மணந்துகொண்டான். அவன் தன் மாமியார் வீட்டில் தங்கியிருக்கும்போது, ஒரு கிருஸ்துமஸ் நாளில், மரணப்படுக்கையிலிருந்த மாலுமி ஒருவன் கதைகள் பல கூறினான். அவற்றில் ஒன்று அட்லாண்டிக் கடலுக்கு அப்பால் இருக்கும் கண்டம் ஒன்றைப் பற்றியதாகும். இந்தக் கதை புதியகண்டத்தைக் கண்டுபிடிப்பதற்கான வழிவகைகளைக் கொலம்பஸுக்குச் சொல்லிக்கொடுக்காவிட்டாலும், கடலுக்கு அப்பால் கண்டம் என்பது பற்றிய கருத்தை அவன் நினைவில் பதியவைத்தது.

அந்த நாட்களில், ஆசியாவில் உள்ள நாடுகள் பற்றியும், குறிப்பாக இந்தியாபற்றியும், அதன் வளம், செல்வம், துணி, மணி, வாணிகம், பெருமை, புகழ் ஆகியவைபற்றியும் பல வகையான கதைகள் ஐரோப்பியரிடையே நடமாடிக்கொண்டிருந்தன. அவைகளும் கொலம்பஸ் காதில் அடிக்கடி விழுந்துகொண்டேயிருந்தன.

அங்கக் காலத்தில் ஆசியா நாடுகளைப்பற்றிக் கேள்விப்படும் வாய்ப்பும், அவற்றைக் காணவேண்டும், அவற்றோடு வாணிகத்தொடர்பு கொள்ளவேண்டும் என்ற ஆவலும் ஐரோப்பிய நாட்டினரிடையே ஏற்படக் காரணம் இருந்தது.

கி. பி. முதல் நூற்றாண்டுக்கு முன்பெல்லாம் கிரீஸ், ரோம் முதலிய நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் வாணிகத் தொடர்பு சிறந்த முறையில் இருந்துவந்திருக்கிறது. அந்தத் தொடர்பு எந்தக்காரணத்தினாலோ தடைப்பட்டுப்போக, இடையில் பல நூற்றாண்டுகள் வரை கீழை நாடுகளைப்பற்றிய செய்தி, மேலை நாடுகளுக்கு எட்டாமற்போயிற்று. பிறகு முகமது தோன்றி இஸ்லாம் நெறியைப் போதித்த பிறகு, அந்த நெறியினைப் பரப்பும் முயற்சியில், கீழை நாடுகளை நோக்கிப் படையெடுப்புகள் பல நடைபெற்றன. இந்தப் படையெடுப்புகளால், இந்தியா பற்றிய செய்திகள் அரேபியா நாட்டிற்குள்புக வழியேற்பட்டது. பின்னர் முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் மூண்ட மதப் போர்களின் விளைவாக, அரேபியாவில் நடமாடிக்கொண்டிருந்த இந்தியாவைப் பற்றிய செய்திகள், கிருத்தவப் போர்வீரர்களின் வாயிலாக இத்தாலி போன்ற நாடுகளில் புகுந்தன. இந்தச் செய்திகளை அறிந்து, கீழைநாடுகளைக் காணவேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டு, கீழைநாடுகளின் பல பகுதிகளிலும் வெவ்வேறு சமயங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தவர்கள் தாம், நிக்கோலோ டி கான்டி, மார்க்கோ போலோ ஆகிய இரு இத்தாலிய வர்த்தகர்களும். இவர்கள் இருவரும் எழுதிவைத்த குறிப்புகளிலிருந்து, இந்தியா போன்ற நாடுகளின் செல்வச் செழிப்பை ஐரோப்பியர்கள் நன்கு அறிந்துகொண்டார்கள். இந்தியாவை அடையவேண்டும் என்ற விருப்பம் ஐரோப்பிய வர்த்தகர்களிடையே மேலிட்டிருந்தது. அவர்கள் தரைவழியாகச் செல்ல நினைத்தாலோ, அது இயலுவதொன்றாகப் படவில்லை. ஏனென்றால், இடையில் பகைவர்களாகக் காட்சியளித்த முஸ்லிம் நாடுகளைக் கடந்து செல்லவேண்டியிருந்தது. அந்தக் காலங்களில் நிலவியிருந்த மதமாற்சரியங்கள், அதற்கு அவ்வளவு எளிதாக இடந்தரவில்லை. வேறு கடல்வழியாகச் செல்லவும் வழி ஏதும் தென்படவில்லை. இந்த நிலையில் இந்தியாவை அடையவேண்டும் என்ற ஆவல்மட்டும் பலருடைய எண்ணத்தில் ஊறிப் போய்க் கிடந்தது.

அட்லாண்டிக் கடலில் தெற்கு நோக்கிச் செல்லச் செல்ல ஆப்பிரிக்காவின் மேற்குக்கரை காணப்பட்டவாறே இருந்ததால், கிழக்கே செல்ல கடல்வழியாக வழியிருக்கமுடியாது என்று எண்ணியிருந்துவிட்டனர். முதலில் வளமிக்க இந்தியாவிற்கு வழிகாண ஆவல்பட்டு முயற்சியில் இறங்கியவர்கள் இத்தாலியர்களே யாவர். ஆனால் உள்நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின் காரணமாக, அந்த முயற்சியில் அவர்களால் முழுவதும் ஈடுபடமுடியாமற் போயிற்று. போர்ச்சுக்கல் அரசனான ஹென்றி என்பானது தூண்டுதலின்பேரிலும், துணையின் பேரிலும் ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையோரமாக முயற்சி செய்துபார்க்கப்பட்டது. அந்த முயற்சி மேற்கூறியபடி வெற்றியளிக்கவில்லை.

இந்த நிலைமைகள் எல்லாமும் கொலம்பஸின் கவனத்தை ஈர்த்தன.

மேலும் 15-வது நூற்றாண்டில், பெரும் பாலானோரிடத்தில், உலகம் தட்டைதான், தங்கள் அறிமுகத்திற்கு ஆன நாடு மட்டுமே தான் உலகம், அட்லாண்டிக் கடலுக்கு அப்பால் நாடு ஏதும் கிடையாது என்ற எண்ணங்களே நிலவியிருந்தன என்றாலும், கற்றறிந்த சிலருடைய உள்ளத்தில் 'உலகம் உருண்டை' என்ற கோபர்னிகஸின் கருத்தும் படிந்திருந்தது. சில அறிவியல் அறிஞர்கள் உலகம் உருண்டை என்ற தத்துவத்தை ஏற்றுக் கொண்டு உலகத்திலுள்ள நாடுகள் எப்படி எப்படி இருக்கக்கூடும் என்று தங்கள் தங்கள் அறிவிற்கு எட்டியவாறு ஊகிக்கத் தலைப்பட்டார்கள். அப்பொழுது போர்ச்சுகல் நாட்டில் இருந்த பாலோ டால் போஸோ டாஸ்கனேல்லி என்ற இயற்கைநூல் அறிஞரும், நாடுகளின் இருப்பு முதலியவற்றை அறிந்து கூறக்கூடியவல்லுநருமான அவர், உலகைப்பற்றிய ஆராய்ச்சி செய்திருந்தார் கீழை நாடுகளைப் போய்ச்சேர கிழக்குப் பக்கமாகவும், தெற்குப் பக்கமாகவும் வழியேதும் அகப்படாததால், வேறு வழி ஏதேனும் இருக்கக்கூடுமா என்று ஆராய்ந்து பார்க்குமாறு, போர்ச்சுக்கல் அரசன் டாஸ்கனெல்லியை வினவினான். அவர் ஆராய்ந்து பார்த்து, மேற்குப்பக்கமாக அட்லாண்டிக் கடலில் சென்றால், கீழைநாடுகளை ஒருவர் அடையக்கூடும் என்றவிதத்தில் கணக்குப் போட்டு, அந்தப்படிக்கு வழிவகைகளை விளக்கி வழிகாட்டி ஒன்று தயாரித்தார்.

அட்லாண்டிக் கடலுக்கு அப்பால் கண்டம் இருப்பதாகக் கதையில் கூறப்படுவதாலும், உலகம் உருண்டை என்று அறிவியல் அறிஞர்கள் கூறுவதாலும், மேற்கு நோக்கிக் கடலில் சென்றுகொண்டேயிருந்தால் எப்படியேனும் ஆசியா நாடுகளைக் குறிப்பாக இந்தியாவை அடைந்துவிட முடியும் என்ற எண்ணம் கொலம்பஸ் உள்ளத்தில் ஒளிவீசிக்கொண்டிருந்தது. இந்த நிலையில் டாஸ்கனெல்லி தயாரித்த மேலைக்கடல் பயணத்தின் வழிகாட்டி கொலம்பஸுக்கு எப்படியோ கிடைத்துவிட்டது. டாஸ்கனெல்லி ஊகித்தது சரியோ தவறோ, ஆனால் அது கொலம்பஸின் உள்ளத்தில் உறுதியாக ஆழப்பதிந்துவிட்டது என்பது மட்டும் உண்மை.

மேலும் அட்லாண்டிக் கடலுக்கு அப்பால் நாடு ஒன்று இருக்கவேண்டும் என்ற எண்ணம் வேறொரு காரணத்தாலும் உறுதிசெய்யப்பட்டது. ஐரோப்பாவின் மேற்குக் கடற்கரையோரமாகவும், ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையோரமாகவும் ஒதுக்கப்பட்ட சில மரங்கள், காய்கள், கொட்டைகள் முதலியன, இந்தக் கண்டங்களைச் சேர்ந்தவையாகக் காணப்படாமல் இங்குள்ள மக்கள் அறியாத ஒரு நாட்டைச் சேர்ந்தவையாக, அதுவும் அட்லாண்டிக்குக்கு அப்பால் உள்ள ஒரு நாட்டைச் சேர்ந்தவையாக இருக்கவேண்டும் என்று ஊகிக்கப்பட்டன.

இப்படியாக இந்தியாவைக் கண்டுபிடிக்க மேற்கு நோக்கிச் செல்லலாம் என்ற எண்ணத்தை உருவாக்கிக்கொண்டிருந்தபோது, கொலம்பஸ் போர்ச்சுக்கல் நாட்டைவிட்டு ஓட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. போர்ச்சுக்கல் அரசனின் கீழ்க் கப்பலோட்டியாக இருந்துவரும்போது, ஏதோ கடுமையான தவறு செய்துவிட்டதன் காரணமாக வீடு வாசல், மனைவி மக்களை விட்டுவிட்டு ஓடும்படியாகக் கொலம்பஸுக்கு ஏற்பட்டது. கொலம்பஸ் வெளியேறும்போது தன்னுடைய நான்கு வயது மகன் டையேகோவை உடன் அழைத்துக்கொண்டு, ஸ்பெயின் நாட்டிற்குப் போய்ச் சேர்ந்தான்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

●

வேதாந்திகள் உரையாடல்

இரண்டு சீன வேதாந்திகள் கீழ்க்கண்டவாறு உரையாடல் புரிந்தனராம்.

"தண்ணீரிலே மீன்கள் எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கின்றன!" என்றாராம் ஒரு வேதாந்தி.

"அது உமக்கு எப்படித் தெரியும்? நீர் ஒரு மீன் அல்லவே!" என்றார் மற்றவர்.

"எனக்குத் தெரியாதென்று உமக்கு எப்படித் தெரியும்? நீர் நான் அல்லவே!" என்றார் முதல் வேதாந்தி.

மதிப்பு இழக்கா மாண்பு

உடலிலே சந்தனம் கமழக், கழுத்திலே மாலை அசையக், காதிலே கடுக்கன் ஒளிரத், தோளிலே தங்கச் சங்கிலி புரளக், கைகளிலே பொன்காப்பு மின்னப், புத்தாடை உடுத்திக் கொண்டு, யானையின்மீது பூரிப்போடு உட்கார்ந்துகொண்டு, சாலையின் வழியே வந்துகொண்டிருப்பவர் யார் என்று, சாலையின் ஓரத்திலே நின்றுகொண்டிருக்கும் ஒரு சிலர், தங்கள் பக்கத்தில் நின்றுகொண்டிருப்பவர்களை உசாவுகிறார்கள்.

"அவர் யார் என்று உனக்குத் தெரியவில்லையா? அவர்தான் பெருஞ்சித்திரனார்!" என்றும், "பெருஞ்சித்திரனார்! பெரும்புலவர்! உனக்குத் தெரியாது! அவர்தான் இவர்" என்றும், "புலவர் பெருஞ்சித்திரனார் என்றால் அறியாதார் யாரும் இருக்கமுடியாதே! நீ அறியாதவன்போல் கேட்பது வேடிக்கையாக வல்லவோ இருக்கிறது!" என்றும், "நம்மூருக்கு முன்பு ஒரு பெரும்புலவர் வந்தாரே, அவர்தான் இவர்!" என்றும், "பத்துப் பதினைந்து நாட்களுக்குமுன்பு, இவ்வழியே இவர் நடந்து போவதைப் பார்த்தேனே! பெருஞ்சித்திரனார் என்ன காரணத்தாலோ நடந்தே போகிறாரே என்று நாங்கள் கூடப் பேசிக்கொண்டோமே! எங்கேயோ போய்ப் பரிசுப் பெற்றுக்கொண்டு வருகிறார் போலேயிருக்கிறது!" என்றும், பலவாறாகப், புலவரை அறிந்தவர்கள், அறியாதவர்களுக்குக் கூறித் தெளிவுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள். யானையானது, வெளிமான் என்ற சிற்றரசன் வாழும், வேளிமானூருக்கு அருகில் வந்துகொண்டிருக்கிறது.

"புலவர் இந்தப் பக்கமிருந்து வருகிறாரே, எங்கே போய்விட்டு வருகிறார்?" என்று ஒரு பெரியவர் மற்றொரு பெரியவரைப் பார்த்துக் கேட்கிறார்.

அதற்கு அவர், "முதிரமலைப் பக்கமிருந்து வருகிறார்போல் தெரிகிறது. ஆமாம், முதிரமலைக் கொற்றவனை குமணனைப் பார்த்துவிட்டுதான் இவர் வரவேண்டும் என்று எண்ணுகிறேன். ஏனென்றால், அவன்தான் இவருக்கு இப்படிப்பட்ட யானையையும், ஆடையணிகலன்களையும் தந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால், இவருக்கு இவற்றையெல்லாம் கொடுக்க, இந்தப் பக்கம் வேறு யார் இருக்கிறார்கள்!" என்று மறுமொழி கூறுகிறார்.

வெளிமான் தன் ஊரைச் சுற்றி மதிலரண், நீரரண், காட்டரண் முதலிய அரண்களை அமைத்திருக்கிறான். காட்டரணைப் பெரும் பெரும் மரங்கள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. பெருஞ்சித்திரனார் யானையோடு அந்தக் காட்டரணில் புகுகிறார். அங்கே இறங்கிக்கொண்டு, யானையை அங்குள்ள மரம் ஒன்றில் கட்டச் செய்கிறார். பாகனை அங்கே இருக்கச்செய்துவிட்டுப், புலவர், ஊர்க்குள் நுழைகிறார்.

புலவருக்கு அறிமுகமானவர்கள், அவர் செல்லும் வழியே எதிர்ப்படுகின்றனர். அவரது நல்ல ஆடை அணிகலக் கோலங்களைக் கண்டு மகிழ்ந்து, வணக்கஞ் செலுத்தி, வாழ்த்துக் கூறிவிட்டுச் செல்கின்றனர். புலவர் நேரே வெளிமான் அரண்மனைக்குள் செல்லுகிறார்.

வெளிமான் நாளோலக்க (தர்பார்) மண்டபத்தில் வீற்றிருந்து, அன்றாட ஆட்சிமுறைச் செயல்களில் அக்கறை செலுத்திக்கொண்டிருக்கிறான். புலவர் பெருஞ்சித்திரனாரைக்கண்டதும் அரசன் வெளிமான் எழுந்துநின்று, வணங்கி வரவேற்கிறான். புலவரும், கைகூப்பித் தம் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறார். புலவரின் முகத்தைக் காணும்போது, அவர் ஏதோ சினங்கொண்டிருப்பவர்போல அவனுக்குப் படுகிறது. அரசன் புலவரை இருக்கையில் உட்காரும்படி வேண்டுகிறான். புலவர் உட்கார

இசையாமல், சினக்குறிப்போடு அரசனை உற்று நோக்குகிறார்.

புலவரின் சினக்குறிப்பு அரசனது உள்ளத்தில் சிலபல நினைவு அலைகளை எழுப்புகின்றது. சில நாட்களுக்குமுன் பெருஞ்சித்திரனார் வெளிமானைப் பார்க்க வந்தார். அப்பொழுது வெளிமான் படுக்கையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். புலவரின் வருகை அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. அரைத்தூக்கத்தில் இருந்த வெளிமான், புலவர் வந்திருப்பதைக் கேட்டு, உடனே நேரே அவரைப் போய்ப்பார்க்க நினைக்காமல், தன் தம்பியை அழைத்துப் புலவருக்கு ஏதேனும் பரிசில் கொடுத்து அனுப்பும்படி கூறினான். கூறிவிட்டு மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டான். வெளிமான் வருவான் என்று பெருஞ்சித்திரனார் வெளியே காத்துக்கொண்டிருந்தார். வெளிமானின் தம்பி, அன்றாடம் வரும் இரப்பவர்க்கு ஏதோ சிறிதளவு பொருள் கொடுத்துதவுவதைப்போல, புலவருக்கும் சிறிதளவு பொருள் எடுத்துக்கொண்டு, அவர்முன் சென்று, அதனை அவரிடம் நீட்டினான்.

புலவர் “இது என்ன?” என்றார்.

“தங்களுக்குக் காணிக்கை!” என்று அவன் கூறினான்.

காணிக்கைப் பொருளையும், அதனை ஏந்தி நிற்கும் வெளிமான் தம்பியையும் ஒருமுறை உற்றுநோக்கிவிட்டு, “வெளிமான் எங்கே?” என்று வினவுகிறார்.

“அவர் உறங்கிக்கொண்டிருக்கிறார். எனவே தான், காணிக்கை கொடுத்தனுப்பும்படி என்னைத் தங்களிடம் அனுப்பினார்” என்று விடையிறுத்தான்.

புலவருக்கு உள்ளத்தில் சினம் பொங்க ஆரம்பித்தது. தன்னை நேரே வந்து காணவேண்டும் என்ற எண்ணமில்லாமல் உறங்கிக்கொண்டிருந்த அரசனது தன்மையையும், தனது தகுதியைப் பழிக்கும் வண்ணம் சிறிதளவே காணிக்கை தந்த போக்கினையும் கண்ட புலவருக்கு அடங்காச் சினம் ஏற்பட்டது. காணிக்கை ஏந்தி எதிரே நிற்பவனைப் பார்த்து, “எனக்குப் பரிசில் வேண்டாம் என்று நான் கூறியதாக நீபோய் வெளிமானிடம் சொல். அவன் என்னைக் கண்ணால் காணவும் விரும்பவில்லை; எனது தகுதியறிந்து காணிக்கை தரவும் எண்ணவில்லை. அப்படிப்பட்டவன் தரும் பரிசை வாங்க நான் வெட்கப்படுகிறேன். போய் வருகிறேன்!” என்று கூறிவிட்டு விரைந்து வெளியேறிவிட்டார்.

இந்த நிகழ்ச்சிகள் பற்றிய நினைவு அலைகள் வெளிமான் மனக்கண்முன் தோன்றுகின்றன. புலவரின் தோற்றத்தில் எப்பொழுதும் காணப்படும் கனிவும், குழைவும் காணப்படாமல், பெருமிதமும், வீரமும் தென்படுவதைக் கண்ட அரசன், தன்னுடைய முன்னைய செயலுக்காக அவர் சினங்கொண்டுள்ளார் என்பதைக் குறிப்பால் உணர்ந்துகொள்கிறான்.

“உட்கார ஏன் தயங்குகிறீர்கள்? அருள் கூர்ந்து உட்கார வேண்டுகிறேன்” என்று அரசன் வெளிமான், பெருஞ்சித்திரனாரை வேண்டிக் கேட்டுக்கொள்கிறான்.

அதற்குப் பெருஞ்சித்திரனார், “நான் உன்னோடு உட்கார்ந்து பேசி மகிழ்ந்துவிட்டுச் செல்லவரவில்லை. உனக்கு ஒன்றினை உணர்த்திவிட்டுச் செல்லவே வந்தேன்” என்று கூறுகிறார்.

“புலவர் பெரும! ஏன் கசந்து கூறுகிறீர்கள்? என்மீது குறையேதேனும் உண்டோ?” என்று அறியாதவன்போல வெளிமான் வினவுகிறான்.

“நாட்டின் தலைவனே! நீ விரைந்து பாய்ந்து செல்லும் குதிரையினை உடையவன்; குதிரை வீரன்! அந்த அளவில் உன்னைப் போற்றவே செய்கிறேன். ஆனால் உன்னிடம் வந்து இரப்பவர்க்குப் (யாசிப்பவர்) பொருள் கொடுத்து அவர்களைக் காப்பாற்றும் தன்மையுடையவன் நீ ஆகமாட்டாய். ஆனால் இரப்பவரைக் காப்பாற்றும் பரம்போர் இவ்வுலகில் வேறு யாரும் இல்லாமலுமில்லை! உன்னைப் போன்றவன் கொடுக்காத காரணத்தால், இரப்பவர்கள் செத்து மடிந்தே போய்விட்டார்களா என்றால், இல்லை! அப்படி இரப்பவர்களையும் நீ இனிக் காணலாம்; அப்படி இரப்பவர்க்குக் கொடுப்பவர்கள் இருப்பதையும் இனி நீ காணலாம்! உன்னுடைய காட்டரணிலுள்ள காவல்மரங்களின் கிளைகளை முறித்துத், தழைகளைத் தின்று, மரங்களை யெல்லாம் பாழ்படுத்திக் கொண்டு, அதோ நிற்கிறதே பெரிய நல்ல

யானை, அது யான் குமணனிடம் பெற்றுவந்த பரிசில். அதைப் பார்! இதை உணர்த்துவதற்குத்தான் நான் இங்கு வந்தேன். இனி எனக்கு இங்கு வேலை இல்லை. நான் போகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புலவர் தம் வழிநோக்கிச் செல்கிறார்.

ஃ ஃ ஃ

இது புறநானூற்றின் 162-வது செய்யுளையும் அதன் அடிக்குறிப்பையும் துணையாகக் கொண்டு தீட்டிக்காட்டப்பட்ட விளக்கமாகும். பெருஞ்சித்திரனார் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். வறுமையால் பிடிக்கப்பட்டவர். வள்ளல்களிடம் சென்று, பொருள் பெற்றுவந்து, வாழ்க்கை நடத்துவது அவரது தொழில். அவரது புலமை அரசர்களாலும், வள்ளல்களாலும் போற்றப்படும் அளவுக்குச் சிறந்து விளங்கியது. பண்டைக்காலப் புலவர்கள் வறுமையிலும் தன்னிலை தாழாமல் காத்துக்கொண்டார்கள் என்பதற்குப், பெருஞ்சித்திரனாரின் மேற்கண்ட நிகழ்ச்சியே சிறந்த எடுத்துக்காட்டாகும். ஒரு புலவரின் பெருமிதம், வீரம், துணிவு, தன்னிலை தாழாமை, இழிந்தார்க்கு இடித்துரைத்தல் ஆகியவற்றிற்கு இச்செய்யுள் சீரிய எடுத்துக்காட்டாகும்.

ஃ ஃ ஃ

இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்(கு) இல்லையும் அல்லர்
இரவலர் உண்மையும் காண் இனி இரவலர்க்(கு)
ஈவோர் உண்மையும் காண்இனி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானைஎம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே.

அடிக்குறிப்பு :—அவர் (பெருஞ்சித்திரனார்)வெளிமானுழைச் சென்றார்க்கு வெளிமான் துஞ்சுவான் தம்பியைப் பரிசில் கொடுவென அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாது போய்க் குமணனைப் பாடிக் குமணன் பகடு கொடுப்பக் கொணர்ந்து நின்று வேளிமானூர்க் கடிமரத்து யாத்துச் சென்று அவர் (பெருஞ்சித்திரனார்) சொல்லியது.

புறம்—162.

[இரவலர் - பொருள்வேண்டி இருப்பவரிடம் சென்று யாசிப்பவர்; புரவல் - பாதுகாத்தல்; புரவலர்-பொருள்கொடுத்து ஆதரிப்போர்; ஈவோர் - கொடுப்போர்: கடிமரம் – காவல் மரம்; அக்காலத்தில் ஊரைச் சுற்றி மரங்களை வளர்த்து அதனைக் காட்டரண் என்று அழைப்பர்; போர்க்காலத்தில், பகையரசன், முதலில் தன் பகைமை உணர்ச்சியை வெளிப்படுத்த அந்த மரங்களை வெட்டிவீழ்த்துவான்: நாட்டரசன் அம்மரங்கள் வெட்டப்படாமல் பாதுகாத்துவருவான்: பிணித்த - கட்டிய பரிசில் – காணிக்கை; கடுமான் – விரைந்து செல்லும் வேகத்தையுடைய குதிரை: தோன்றல் - தலைவன்; வெளிமானுழை -- வெளிமானிடத்து; துஞ்சுவான் - தூங்குவான்; பகடு - யானை; யாத்து – கட்டி.]

**

சிறுவனின் விடை

அர்மீனியாவின் சாலையிலுள்ள சாவடி ஒன்றில் ஒரு சிறுவன் சிகரெட் குடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

இதைக் கண்டு திடுக்கிட்ட ஓர் அயல்நாட்டுப் பிரயாணி, "என் தம்பி, நீ பள்ளிக்கூடம் போகவில்லை?" என்று கேட்டார்.

"நானா! பள்ளிக்கூடத்துக்கா! என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கமாட்டார்களாம், எனக்கு வயது இல்லையாம்!" என்று விடையிறுத்தானாம் அந்த நான்கு வயதுச் சிறுவன்.

அட்டைப்பட விளக்கம் :

மன்னனும் மதத்தலைவரும்

மன்னன் பெரியவனா? மதத்தலைவன் பெரியவனா? ஆதிக்கம், மன்னனுக்கா? அல்லது மதத்தலைவனுக்கா? யாருக்கு யார் கட்டுப்படவேண்டும்? என்ற கேள்விகள், ஐரோப்பாவின் இடைக்கால வரலாற்றில், அடிக்கடி எழுந்த வண்ணம் இருந்தன.

மன்னனுக்கும் மதத்தலைவனுக்கும் பகைமையுணர்ச்சியும், போட்டி மனப்பான்மையும் மூண்டு விட்டால், மன்னன் மதத்தலைவனைப் பதவியைவிட்டு அகற்றவும், சிறைபிடிக்கவும், நாடுகடத்தவும், கொலைத் தண்டம் விதிக்கவும் ஆன முயற்சிகளில் ஈடுபடுவான்; மதத்தலைவன் மன்னனை மதவிலக்கு செய்யவும், மன்னன் மீதும் நாட்டின்மீதும் சாபமிடவும், அரசனை வெறுத்தொதுக்கும்படி பக்த கோடிகளுக்குக் கட்டளை பிறப்பிக்கவும் ஆன செயல்களில் ஈடுபடுவான். மதத்தலைவரான போப்புக்கு, ஐரோப்பாவின் இடைக்கால மன்னர்கள் பெரும்பாலோரும் அடங்கியே நடந்துவந்தனர் என்றாலும், சிற்சில பொழுதில் சிலர் வேறுபட்டு நிற்கவும் முயன்றனர்.

நான்காம் பிலிப் மன்னன் பிரான்ஸ் நாட்டில் ஆட்சி செலுத்தி வந்தபோது, எட்டாம் போனிபேஸ், ரோம் குருபீடத்தில் போப்பாக வீற்றிருந்தார். போனிபேஸ் 1294-ம் ஆண்டில் போப்பட்டம் சூட்டிக்கொண்டார். அவர் திண்மையும் திறமையும், தந்திரமும், அலட்சியப் போக்கும் கொண்டவராய்த் திகழ்ந்துவந்தார்.

நான்காம் பிலிப் இங்கிலாந்தோடு போர் தொடுக்கவேண்டியிருந்ததால், முன் கூட்டியே பணம் திரட்டிக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் காரணமாகப் பிரான்சிலுள்ள கோயில் சொத்துக்களின்மீது புதிதாக வரிவிதித்தான். தம்முடைய அனுமதியைப் பெறாமல் அரசன் வரிவிதித்ததைக் கண்ட போப், அரசனை மதவிலக்குச் செய்துவிடப் போவதாகவும், அவனையும் அவனது நாட்டையும் சபித்துவிடப்போவதாகவும் மிரட்டிக் கட்டளைத் திருமுகம் ஒன்று அனுப்பிவைத்ததோடல்லாமல், தம்முடைய அனுமதியில்லாமல், பிரான்சில், யாரும் கோயில் சொத்துக்களின்மீது வரிவசூல் செய்யவோ, அவற்றின் பேரால் வரி செலுத்தவோ கூடாது என்றும் உத்தரவு பிறப்பித்தார். போப்பின் கட்டளையைப் பார்த்த அரசன் வெகுண்டு, பிரான்ஸ் நாட்டிலிருந்து பணமோ, பொருளோ வெளி நாடுகளுக்குப் போகக்கூடாது என்று உத்திரவு போட்டான். பிரான்ஸ் நாட்டிலிருந்து பணம் வராவிட்டால் போப்புக்கு மிக்க வருமானம் குறைந்துவிடும். இதன் காரணமாகத் தம் உத்தரவை மாற்றிக்கொள்ளவும், இங்கிலாந்தோடு போர் ஏற்படாமல் தடுக்க உதவி செய்வதாகவும் போப் பிலிப் மன்னனுக்குச் செய்தியனுப்பினார்.

பிலிப் போப்பின் கருத்துக்கு இசைந்து, பிரச்னையைத் தீர்ப்பதற்காக நடுநிலையாளராக அவரை ஏற்றுக்கொண்டான். தீர்ப்பு வழங்கும்போது போனிபேஸ் மன்னனுக்கு மாறுபாடாகவே வழங்கினார். பிலிப் அந்தத் தீர்ப்புக்கு இணங்க மறுத்ததோடல்லாமல், போப்பின் திருமுகத்தைத், தன் அரசவையிலே நெருப்பிலிட்டுக் கொளுத்தினான்.

போப் தம்முடைய செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ளவும், பணப்பையை நிரப்பிக்கொள்ளவும் எண்ணினார். பிரான்ஸ் மன்னனின் எதிர்ப்பைச் சமாளிக்க இவைகள் அவருக்குத் தேவைப்பட்டன. 1300-ம் ஆண்டில் ரோம் நகரில் செயின்ட் பீட்டர் கோயிலில், பெருவிழாக் கொண்டாடப் போவதாகவும், மக்கள் எல்லோரும் பாபங்களைச் சொல்லிக்கொள்ளவும், பாபமன்னிப்புப் பெற்றுக்கொள்ளவும் அங்குத் திரளவேண்டும் என்றும் பிரகடனம் வெளிப்படுத்தினார். ரோம் நகரின் தெருக்கள் இடம் கொள்ளாத அளவுக்கு விழாவுக்காக

வினாவும் விளக்கமும்

திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் இயக்கமா? சமுதாய சீர்திருத்த இயக்கமா?

இந்த ஐயம் பலருடைய உள்ளத்தில் அடிக்கடி எழும்புகிறது. திராவிட முன்னேற்றக் கழகம், அரசியலை அறவே ஒதுக்கிவிட்ட சமுதாய சீர்திருத்தத்துக்காக மட்டுமோ அல்லது சமுதாயத்தை அறவே ஒதுக்கிவிட்ட அரசியலுக்காக மட்டுமோ பாடுபடத் தோன்றிய இயக்கம் அல்ல. அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய மூன்று துறைகளிலும் சம அளவில் நின்று, தேவையான அளவுக்குப் பாடுபட்டு, மூன்று துறைகளையும் ஒருசேர உயர்த்திக்கொண்டுபோகவே கழகம் விரும்புகிறது. அந்த அடிப்படையிலேயே, கொள்கைகள் வகுத்துத், திட்டங்கள் தீட்டிச், செயலாற்றி வருகிறது.

குறுக்கு இழையாலும் நெடுக்கு இழையாலும் பின்னப்பட்டே வேட்டி அமைவது போல, மனித வாழ்வு அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம் என்ற குறுக்கு, நெடுக்கு, மாறு இழைகளால் ஆக்கப்பட்ட ஒன்றாகவே அமைந்துள்ளது. நாட்டில் நடமாடும் எந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும் அரசியல், பொருளாதாரச் சமுதாயச் சாயல்கள் அவற்றில் படிந்திருக்கக் காணலாம். மூன்று

மக்கள் பெருந்திரளாகக் கூடினர்; ஏராளமான பணமும் திரண்டது.

தம்பக்கம் வெற்றி கிட்டும் என்ற முழு நம்பிக்கையோடு, போப், கோயில் சொத்தின்மீது எந்த வரியும் வசூலிக்கக்கூடாது என்ற கட்டளையைப் பிறப்பித்து, அதனை ஒரு பாதிரியார் மூலம் பிலிப்புக்கு அனுப்பிவைத்தார். மன்னன், போப் தன்னை அவமானப்படுத்துகிறார் என்று எண்ணி, அந்தப் பாதிரியாரைப் பிடித்துச் சிறையிலடைத்ததோடு, அரச எதிர்ப்புக் குற்றச்சாட்டையும் அவர்மீது சுமத்தினான். 1301-ம் ஆண்டில் போப் ஒரு கட்டளைத்திருமுகம் அனுப்பி, அதில் "ஆண்டவன் எம்மை அரசர்களுக்கும், அரசாங்கங்களுக்கும் மேலாக வைத்துள்ளார்" என்று குறிப்பிட்டிருந்தார். அதற்கு அரசன், "ஏ, முழுமூடமே! உலகியல் விவகாரங்களில் நாங்கள் யாருக்கும் அடங்கி நடக்கவேண்டிய அவசியமில்லை என்பதை உணரும்!" என்று விடையிறுத்தான்.

பிலிப் பிரான்ஸ் நாட்டிலுள்ள பிரபுக்கள், படைத்தலைவர்கள், பாதிரிமார்கள், பொதுமக்கள் ஆகிய பலரையும் கூட்டிவைத்து, பிரான்சின் அரசு போப்புக்குக் கீழ்ப்படியவேண்டிய அவசியமில்லை என்ற முடிவை ஏற்கும்படி செய்தான்.

பிரெஞ்சுப் பாதிரிகள் அனைவரும் அரசனை ஆதரித்த காரணத்துக்காக அவர்கள் எல்லோரையும் கோயில் பணிகளிலிருந்து நீக்கிவிட்டதாக உத்தரவு பிறப்பித்ததோடு, அரசனை மதவிலக்குச் செய்துவிட்டதாகக் கட்டளைத்திருமுகம் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தான். போப் போனிபேஸ் இந்தக் கட்டளைத் திருமுகத்தை அனுப்பிவைப்பதற்கு முன்பே அரசனின் படைவீரர்கள் சென்று, போப்பைக் கைது செய்து, சிறையிலடைத்தனர்.

போப் தம்முடைய கோடைகால அரண்மனையில் கொலுவீற்றிருக்கும்போதுதான், படைவீரர்கள் கொலு மண்டபத்திற்குள் நுழைந்தனர்; பாதிரிமார்களும் பக்தகோடிகளும் வெருண்டோடினர்; போப் மிரண்டு திகைத்துப்போய் நின்றார்; போர்வீரர்கள் பீடம்விட்டு இறங்கிவரும்படி அதட்டிக்கூறினர். அந்தக் காட்சியைத்தான் அட்டைப்படம் விளக்குகிறது.

சிலநாட்களுக்குப் பிறகு போப் பொதுமக்களால் விடுவிக்கப்பட்டார். என்றாலும், சிறைக் காவலில் அவர் உடல்நலம் மிகவும் குன்றிப் போய்விட்டதால், அவர் நீண்டகாலம் உயிர் வாழ்ந்திருக்க முடியவில்லை; சில திங்களுக்குள்ளேயே இறந்துபட்டார்.

பல தடவைகளில் மன்னர்களை மதத்தலைவர்கள் ஆட்டிப்படைத்தாலும், இந்தத்தடவை மதத்தலைவரை மன்னன் ஆட்டிப்படைத்தான்!

துறைகளிலும் கவலை செலுத்தி, நலிவு போக்கி, நலம் ஊட்டினால்தான் மக்களின் பொதுத்தரம் உயரும் என்ற உறுதிப்பாட்டை அடிப்படையாகக்கொண்டுதான், தி. மு. கழகம் மூன்று துறைகளிலும் நாட்டம் செலுத்துகிறது ; மும்முனைகளிலும் பாடுபடுகிறது.

நலிந்து கிடந்த சீனாவை நல்லதோர் நிலைக்குக் கொண்டுவரப் பாடுபட்ட மா-சே-துங், "நாம் அரசியலிலே அடிமைப்பட்டிருக்கும் சீனாவை, அரசியல் விடுதலை பெற்ற நாடாகவும், பொருளாதாரத் துறையிலே சுரண்டப்படும் சீனாவைப், பொருளாதாரத்திலே வளமான நாடாகவும் மாற்றியமைக்கவேண்டியவர்களாக இருப்பதோடு, அறியாமையிலும் பிற்போக்கிலும் தள்ளப்பட்டுப், பழமையான பண்பாட்டால் ஆளப்படும் மக்கள் நிறைந்த சீன நாட்டை, நாகரிகம் வாய்ந்த ஒன்றாகவும், முற்போக்கு வாய்ந்த ஒன்றாகவும் ஆக்கிப், புதிய சமுதாயப் பண்பாட்டால் ஆளப்படும் தன்மையதாகவும் மாற்றியமைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்" என்று தெளிவுபடக் கூறியுள்ளார்.

பழம் பெருமைபடைத்த சீன நாட்டோடு பலவகையிலும் ஒத்துவரக்கூடிய திராவிடத்திற்கும், மா-சே-துங் கூறியுள்ள கூற்றுக்கள் அப்படியே பொருந்திவருவதைக் காணலாம். சமுதாயத்தைப் பற்றிக் கவலைப் படவேண்டியதில்லை, அரசியல்—பொருளாதாரத்தைப் பற்றி மட்டும் கவலைப்பட்டால் போதும் என்று கூறிடுவோர்க்கு மா-சே-துங்கின் கூற்றுக்கள் நல்ல தெளிவுபயக்கும்.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகம், அரசியல்—பொருளாதார—சமுதாயத் துறைகள் மூன்றினையும் இணைத்து நின்று, அவற்றிற்காகத் திராவிடத்தில் பாடுபட்டுவருகிறதேயல்லாமல், ஒவ்வொன்றினை விலக்கிவிட்டு மற்றவற்றிற்காக மட்டுமே பாடுபடுவதல்ல. அதனை 'மும்முனை இயக்கம்' என்றுதான் கொள்ளவேண்டும்.

oo oo oo

தி. மு. கழகக் கொடியில் இருவண்ணங் காட்சியளிப்பதேன் ?

தி. மு. கழகத்தின் கொடியில் மேல் பாதி கறுப்பாகவும், கீழ்ப்பாதி சிவப்பாகவும் அமைந்திருக்கின்றன. கறுப்பு, திராவிடம் அரசியல் — பொருளாதார — சமுதாய நிலைகளில், இழிந்த நிலையிலிருக்கிறது—இருண்ட நிலையிலிருக்கிறது என்பதைக் காட்டுவதன் அறிகுறி. சிவப்பு, அம் மூன்று துறைகளிலும் திராவிடம் உயர்வு பெறவேண்டும்—ஒளிபெற்ற நிலையை அடையவேண்டும் என்பதன் அறிகுறி. உலகெங்கும் இழிவுக்குத், தாழ்வுக்கு, அடிமைக்கு, அறியாமைக்குக் கொண்டிருக்கும் நிறம் கறுப்பாகும்; மேன்மைக்கு, உயர்வுக்குப், புரட்சிக்கு, அறிவுடைமைக்குக் கொண்டிருக்கும் நிறம் சிவப்பு. இயற்கைப்படி பார்த்தாலும் இருளின் நிறம் கறுப்பு ; ஒளியின் நிறம் சிவப்பு.

இருண்டு கிடக்கும் திராவிடத்தை ஒளி பெற்ற திராவிடமாக ஆக்கவேண்டும், வீழ்ச்சியுற்ற திராவிடத்தை எழுச்சியுறச் செய்ய வேண்டும் என்பதை உணர்த்துவதன் பொருட்டுதான் மேலே கறுப்பு வண்ணமும், கீழே சிவப்பு வண்ணமும் கொடியில் மிளிர்கின்றன. திராவிடம் இன்று இருக்கும் நிலையைக் கறுப்பும், இனி இருக்கவேண்டிய நிலையைச் சிவப்பும் உணர்த்துகின்றன. செஞ்ஞாயிற்றின் ஒளி எழ எழ இருட்படலம் மறைந்து போவதுபோல் புரட்சி ஓங்க ஓங்க, இழிவு ஒழியவேண்டும் என்பதாகும். எனவேதான் கழகம், "இழிவு ஒழிக! புரட்சி ஓங்குக!" என்ற ஒலிமுழக்கத்தை கொடி ஏந்தும் நிலையிலும், கொடி ஏற்றும் நிலையிலும் கூறுகிறது.

பெர்னாட்ஷாவின் குறும்பு

ஜியார்ஜ் பெர்னாட்ஷா ஆங்கில ஆசிரியர்களுள் நகைச்சுவை ததும்ப, கேலியும் கிண்டலும் விரவ, அழுத்தந்திருத்தமாக எதையும் சொல்லக்கூடிய ஆற்றலுள்ளவர்.

ஷாவின் 'காண்டிடா' என்ற நாடகத்தில் நீண்ட நாட்களுக்குப் பிறகு கார்னீலியா ஒட்டிஸ் ஸ்கின்னர் என்ற நடிகை மீண்டும் நடித்தாள்.

"மிக நேர்த்தி. தனி அழகு" என்று, ஷா, அவளுக்கு ஒரு தந்தி கொடுத்தார்.

நடிகை மனமுருகிவிட்டாள். "இவ்வளவு புகழுக்குத் தகுதியில்லை" என்று பதில் தந்தியில் குறிப்பிட்டாள்.

"நான் நாடகத்தை அல்லவா குறிப்பிட்டேன்!" என்றுஷா விடைசொன்னார்.

நடிகையும் விடவில்லை. "நானும் அதைத்தான் குறித்தேன்!" என்று அவள் விடைகொடுத்தாள்.

அரை நாள் படிப்பு அங்கும் உண்டு!

ஆனால்...?

அரைநாள் படிப்பு—அரைநாள் தொழில் என்ற முறை, செல்வப் பெருக்கில் மேலோங்கி நிற்கும் அமெரிக்காவிலும் உண்டு. ஆனால்,

(1) அந்த முறை 16 வயதுள்ளவர்களுக்கும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும் மட்டுமே, என்று அங்கு வகுக்கப்பட்டிருக்கிறதே யல்லாமல், 5 வயதுக்கும் 11-வயதுக்கும் உட்பட்டவர்களுக்கு என்று இங்குள்ளதைப்போல் வகுக்கப்படவில்லை.

(2) ஆரம்பப்பள்ளி, நடுத்தரப்பள்ளி ஆகியவைகள் நீக்கி உயர்நிலைப்பள்ளியிலும், கல்லூரியிலும் மட்டுமேதான் அந்த முறை அங்கு கையாளப்படுகிறதேயல்லாமல், இங்குள்ளதைப் போல், ஆரம்பப்பள்ளிக்கு மட்டுமே என்று செய்யப்படவில்லை.

(3) அங்கு அரைநாள் படிப்புப் படித்து, அரை நாள் தொழில் செய்ய அல்லது தொழிற் பயிற்சிபெற விரும்புபவர்கள் அப்படிச் செய்யலாம் என்றிருக்கிறதேயொழிய, இங்குள்ளதைப்போன்று அரைநாள் மட்டுமே படிக்க வேண்டும் அரைநாள் மட்டும் தொழில் செய்ய வேண்டும் என்றில்லை.

(4) அங்கு முழுநேரமும் படிக்கவேண்டுமென்றாலும், அல்லது அரை நேரம் மட்டுமே படிக்கவேண்டுமென்றாலும் அதற்கான வாய்ப்பு உண்டு, அது அவரவர் விருப்பத்தைப் பொறுத்ததேயொழிய, இங்குள்ளதைப்போல ஆரம்பப் பள்ளிகளிலுள்ள அனைவரும் அரைநேரம் மட்டுமே படிக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

(5) அங்குக் கல்விநிலையத் தலைவர்களுக்கும் தொழில் அதிபர்களுக்கும் ஏற்படும் உடன்பாட்டின்பேரில், தொழிற்பயிற்சி கற்பிக்கப்படுமே யொழிய, இங்குள்ளதைப்போல், பெற்றோர்களும் மாணவர்களும் தங்கள் சொந்த முயற்சியிலேயே பொறுப்பேற்றுக்கொள்வார்கள் என்று விட்டுவிடும் நிலை இல்லை.

(6) அங்கு, அவரவர் பொறுப்புணரக்கூடிய வயதில், அவரவர்க்கு விருப்பமான தொழிலை விருப்பப்படிக் கல்வியோடு சேர்த்துக் கற்றுக் கொள்ளலாம் என்று இருக்கிறதே யொழிய, இங்குள்ளதைப்போல், பொறுப்பறியாப் பருவத்தில், குலத்தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதில்லை.

(7) அங்கு, வளரும்—வளத்தைப் பெருக்கும்—உலகச் சந்தையைப் பிடிக்கும் விஞ்ஞானத்தொழிற் பயிற்சியைப் பெற திட்டம் வகுத்திருக்கிறார்களே யொழிய, இங்குள்ளதைப்போல, மிக்க வருவாயைத் தராத—உலகச் சந்தையைப் பிடித்துத்தராத—உள்நாட்டிலேயே நெருக்கடியை உண்டாக்கிக்கொண்டிருக்கும் கிராமக் குடிசைத்தொழில்களைக் கற்கத் திட்டம் தீட்டவில்லை.

அமெரிக்காவில் ஆரம்பப்பள்ளிகள் அடிப்படை அறிவை மாணவர்களுக்குக் கற்பித்து, அவர்களின் பண்புகளைப் பக்குவப்படுத்தும் அறிவுப் பயிற்சிக் கூடங்களாகத் தாம் இருந்து வருகின்றனவே யல்லாமல், தொழிற்பயிற்சிக் கூடங்களாக ஆக்கப்படவில்லை.

அமெரிக்காவில் பெருநகரங்களிலும், சிறு நகரங்களிலும் உள்ள உயர்நிலைப் பள்ளிகள்—கல்லூரிகள் ஆகியவைகள் ஆங்காங்குள்ள வணிக நிலையங்களோடும், தொழிற்சாலைகளோடும் தொடர்பு வைத்துக்கொள்கின்றன. மாணவர்களுக்குத் தொழிற்சாலைகள் சோதனைக் கூடங்களாக விளங்குகின்றன. பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் படிக்கும் மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான தொழிலைத் தெரிந்து

கொண்டு, அதனைத் தொழிற்கூடங்களுக்குச் சென்று பயிலுகிறார்கள்.

இவ்வாறு, விஞ்ஞானத்துணையால் வளர்ந்த தொழிற்கூடங்களும், வாணிப நிலையங்களும் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களோடு ஒத்துழைப்பதால், படிப்பு முடிந்தவுடன் மாணவர் யாதேனும் தொழிற் செய்வதற்கு வசதியாக இருக்கிறது; மாணவர்கள் பாடசாலைகளை விட்டு வெளியேறியவுடன் எளிதாக யாதேனும் வேலைசெய்யக்கூடியவர்களாகிறார்கள்.

வாழ்க்கையைப்பற்றித் தெரிந்துகொள்ளக் கூடிய, பொறுப்பு உணரக்கூடிய வயதான பதினாறு வயதுக்கு மேற்பட்டோர்க்கே இந்த முறை என்று வகுக்கப்பட்டிருப்பதால், அத்தகைய மாணவர்கள் பள்ளிகளில் பொதுக் கல்வி பெற்றுக்கொண்டு, தொழிற்கூடங்களில் தொழிற்பயிற்சி பெறுகிறார்கள்.

அமெரிக்காவில் வயதுவந்த மாணவர்கள் பெரும்பாலும் அரை நாள் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள்; அரை நாள் தொழிற்கூடத்தில் வேலை செய்கிறார்கள். சில இடங்களில் ஒரு நாள் பள்ளிக்கூடத்துக்குப் போவார்கள்; மறு நாள் தொழிற்கூடத்துக்குப் போவார்கள். வேறு சில இடங்களில் இரண்டு மாணவர்கள் ஒரே வேலை செய்வார்கள். அவர்களுள் ஒருவர் பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது மற்றவர் வேலைக்குப் போவார். வேலைக்குப் போனவர் பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது மற்றவர் வேலைக்குப்போவார்.

தொழிற்கூடத்தில் செய்யும் வேலைக்கு மாணவருக்குச் சம்பளம் கிடைக்கும். செய்யவேண்டிய வேலைபற்றியும் சம்பளம் பற்றியும் பள்ளிக்கூடத்து அதிகாரிகளும் தொழில் அதிபர்களும் ஒப்பந்தம் செய்துகொள்வார்கள். தொழில் கற்றுக்கொடுப்பதற்கு வேண்டிய கருவிகளையும் வசதிகளையும் தொழிற் கூடங்கள் கொடுக்கின்றன. ஆதலால் செலவில்லாமல் பல்வகைத் தொழில்களையும் மாணவர்கள் படிக்கிறார்கள்.

அமெரிக்காவில் தொழிலும் படிப்பும் கலந்த இத்திட்டம் ஐந்து வகைப்படும்.

(1) தொழிற்சாலைத் தொழில்கள்:—இந்தத் திட்டத்தின்படி மாணவர்கள் தொழிற்சாலைகளில் மோட்டார் மெக்கானிஸம், உலோக வேலை, மின்சாரவேலை முதலிய யாதேனும் வேலை பழகித் திறமைவாய்ந்தவர்களாகிவிடுகிறார்கள்.

(2) அலுவலக வேலைகள்:—சில மாணவர்கள் கணக்குப் பதிதல், திட்டம் தீட்டுதல், செயலாற்றல் போன்ற அலுவலக வேலைகள் பயில்கிறார்கள். அவற்றிற்குரிய படிப்பு பாடசாலையில் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

(3) விற்பனை வேலை:—சாமான்களை விற்பதற்குரிய பயிற்சி இதனால் அளிக்கப்படுகிறது.

(4) பல்வகை வேலைகள்:—இத்திட்டத்தின்படி சில மாணவர் ஒன்றிற்கு மேற்பட்ட வேலைகள் பயில்கின்றனர்.

(5) தொழிற்பயிற்சி:—இத்திட்டத்தின்படி தொழிலுக்குரிய படிப்பு வகுப்பறையிலும் சொல்லிக்கொடுக்கப்படும்; திறமைவாய்ந்த தொழில் வினைஞர்களாகவும், தச்சுவேலை செய்வோராகவும், மின்சார வேலையாட்களாகவும் ஆவதற்குப் பயிற்சியும் அளிக்கப்படும்.

அரைநாள் படிப்பு அங்கும் உண்டு! ஆனால் அங்கு அது வளர்ச்சிதரும் வகையில் அமைந்திருக்கிறது, இங்கு வர்ணாச்சிரமத்தை நிலைநாட்டும் வகையில் அமைந்திருக்கிறது! காரணம் இங்கு திட்டம் தீட்டியவர் விஞ்ஞானி அல்ல, வேதாந்தி!

சோதிடரின் திறம்

இத்தாலியில் பதினோராம் லூயி என்ற மன்னர் ஆண்டுவந்த காலத்தில், காலியோட்டி என்ற ஒரு சோதிடர் இருந்தார். அவரை அரசர் ஒரு கேள்வி கேட்டார்: "இன்ன நாளன்று நீர் இறந்துபடுவீர் என்பதை உம்மால் உறுதியாய்ச் சொல்லமுடியுமா?"

அதற்குச் சோதிடர், "அது சரியாய்த் தெரியாது. ஆனால், ஒன்றுமட்டும் உறுதியாய்த் தெரியும். தாங்கள் இறக்கத் திட்டமாய் இருபத்தினான்கு மணிநேரம் இருக்கும்போது நான் இறந்துபோவேன்" என்று கூறினாராம்.

அதுமுதல் சோதிடரின் உடல்நலத்தை மிக்க அக்கறையோடு மன்னர் பாதுகாத்து வரலானார்.

:: தையற்கலை ::

[கே. பி. சுந்தரம் G. C. T.]

(யோக்) பிளவுஸ்

பிளவுஸ்—அல்லது சோலியை நன்கு வெட்டப் பழகிய பிறகு இந்த யோக் பிளவுஸ் வெட்டுவதற்கு மிகவும் இலகுவாக இருக்கும். பின்பக்கம் ஒரு யோக்கும் முன்பக்கம் ஒரு யோக்கும் (ரியாத்) தோள் வளைவில் டக்கும் (காந்தா) தோள்பக்கம் டக்கும், சைடில் (பக்கவாட்டத்தில்) டக்கும் அமைந்த பிளவுசின் விளக்கப் படமே இது. இந்த பிளவுஸ் உடர்புடன் ஒட்டியபடியும் எழில்மிக்கத் தோற்றத்தையும் தர வல்லது.

அளவுகள்

இடுப்புவரை முதுகு நீளம்	14	அங்.
முழுநீளம் (முன்பக்கம்)	18	,,
முழுநீளம் (பின்பக்கம்)	17½	,,
பாதித்தோள்	6½	,,
மார்பு சுற்றளவு	34	,,

பின்பக்கம்

1-ல் இருந்து 0 வரை 18 அங்.
(முழு நீளம் + ½ அங்)
2-ல் இருந்து 0 வரை 7¾ ,,
(¼ மார்பு அளவில் ¾ அங். குறைவு)
3-ல் இருந்து 0 வரை 14½ அங்.
(இடுப்புவரை முதுகு நீளம் + ½ அங்.)
4-ல் இருந்து 0 வரை 3 அங்.
5-ல் இருந்து 0 வரை 6¾ ,,
(பாதி தோள் + ¼ அங்)
6-ல் இருந்து 0 வரை ½ ,,
7-ல் இருந்து 5 வரை நேர்க்கோடு இணைக்க.
8-ல் இருந்து 2 வரை 9¼ அங்.
(¼ மார்பளவு + ¾ அங்.)
9-ல் இருந்து 3 வரை 8¾ அங்.
10-ல் இருந்து 1 வரை 9¼ ,,
11-ல் இருந்து 0 வரை 1½ ,,
12-ல் இருந்து 0 வரை 4½ ,,
(1/8 மார்பளவு + ¼ அங்.)
13-ல் இருந்து 6 வரை 2 ,,
(12-க்கும் 13-க்கும் [யோக்] இணைக்கவும்)

முன் பக்கம்

14-ல் இருந்து 15 வரை 18½ அங்.
(முழு நீளம் + ½ அங்.)
15-ல் இருந்து H வரை 9½ ,,
C-ல் இருந்து 14 வரை 7¼ ,,
(¼ மார்பளவில் 1¼ அங். குறைவு)

(தொடரும்)



Regd. No. M 6296

நீதிபெற நிதிதாரீர்!

தூத்துக்குடியிலும் — கல்லக்குடியிலும்

ஆணவ ஆச்சாரியாரின் அரசாங்கத்தால்

குற்றங்கள் சுமத்தப்பட்டுக் குற்றக்கூண்டிலே

நிறுத்தப்பட்டிருக்கும் கழகத் தோழர்களை மீட்க,

கழகத்தின்மீது வீசப்பட்ட மாசினைப் போக்க,

நிதி தாரீர்!

அறிஞர் அண்ணாவின் வேண்டுகோளுக்கிணங்க

ரூ. 20000-ஐ மீறும் அளவுக்குத் தாரீர்!

இரண்டு வழக்குகளையும் ஏற்றுநடத்தும் தி. மு. க. தலைமை

நிலையத்திற்கு வலிவையும் வளத்தையும் தாரீர்!

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

அ. பொன்னம்பலனார், நிதிப்பொறுப்பாளர்,

"அறிவகம்", இராயபுரம், சென்னை.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.